# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி21ஞாயிற்றுக்கிழமை (06-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 241


8 SEP 1998

# மத்தியஸ்தத்துக்கு மண்டேலா தயார்

## இலங்கையிடம் தெரிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 6

ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் சமாதானப் பேச்சுக்கான மேசைக்கு அழைப்பதற்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மத்தியஸ்தம் வகிக்க தயாராக இருப்பதாக தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தென்னாபிரிக்கா சென்ற இலங்கைப் பிரதிநிதிகளிடம் தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் இது குறித்து தெரியப்படுத்தி உள்ளாராம்.

தென்னாபிரிக்காவில் உள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரிவினர் அண்மையில் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவைச் சந்தித்து ஸ்ரீ

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் சமாதான பேச்சில் பங்குபற்றுவது சாத்தியம்!

## பிரிட்டிஷ் தூதுவர் நம்பிக்கை

கொழும்பு, செப். 6

வட-அயர்லாந்துப் பிரச்சினையும், இலங்கையின் இனப் பிரச்சினையும் பொதுவான இயல்புகளைக் கொண்டுள்ளன எனவே விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளச் செய்யும் சாத்தியம் இருக்கிறது.

இவ்வாறு இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் தத்தம் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தைத் தடுக்கும் வழிகள் சம்பந்தமாக கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பிரிட்டிஷ் தூதுவர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

வட அயர்லாந்தில் ஐ.ஆர்.ஏ. இயக்கம் செய்ததைப் போன்று ஏனைய நாடுகளில் உள்ள இயக்கங்களும் அரசியல் வழிகள் மூலம் தமது நோக்கங்களை அடைவதற்கு முடிவு செய்யக்கூடும்.

அவர்களை ஒதுக்குவதற்குப் பதிலாக உற்சாகப்படுத்துதல் வேண்டும்; தவிர்ப்பதற்குப் பதிலாக சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் துப்பாக்கியினால் சாதிக்கக் கூடியதை விட அதிகமானவற்றை பேச்சுவார்த்தைகள் மூலம் சாதிக்க முடியும் என்பதை இயக்கங்கள் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலங்கை வன் செயல்களினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு.

அண்மையில் நைரோபி

(12 ஆம் பக்கம் பார்க்க)



அப்பநிதி இல்லாத சபையை வைச்சு மாரடிக்கிறம் எண்டு சொல்லுங்கோ...!

# முல்லையில் உண்ணாவிரதம் தொடர்கிறது

வவுனியா, செப். 6

நிவாரண வெட்டைக் கண்டித்து முல்லைத்தீவு அரச செயலகம் முன்பாக நான்காவது நாளாக நேற்றும் உண்ணாவிரதம் இடம் பெற்றது.

நேற்றைய உண்ணாவிரதத்தில் 575 பேர் கலந்து கொண்டனர் என இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# காலநிலை சீர்கேடு விமான சேவை பாதிப்பு

## இன்று விசேட சேவை

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கு இடையிலான விமான சேவை சீரற்ற காலநிலை காரணமாக நேற்று பாதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து விமானம் மூலம் கொழும்பு செல்வதற்காக பலாலி சென்ற பயணிகள் இறுதி விமான சேவைகள் இடம்பெறாததால் திரும்பி வந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதே சமயம் மொனறா விமான சேவை ஒன்று சீரற்ற காலநிலை காரணமாக நேற்று நடைபெறவில்லை எனவும்-

அதற்குப் பதிலாக இன்று விசேடமாக விமானசேவை ஒன்று நடத்தப்பட உள்ளது எனவும்—

நேற்றுப் பயணம் செய்ய முடியாதவர்களும், அவசர

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண முதலமைச்சர் வழக்குத் தொடர முடிவு!

## நிதி ஒதுக்கீடு கோரி

கொழும்பு, செப். 6

மாகாண சபை நடவடிக்கைகளுக்கு மத்திய அரசாங்கம் விரைவில் பணத்தை ஒதுக்கீடுசெய்யாவிட்டால் அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக வடமேல் மாகாண சபை முதலமைச்சர் நிமால் பண்டார அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ரயிலில் குண்டு!

கொழும்பு, செப். 6

புத்தளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று புத்தளம் பொலீஸாரால் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளது.

ரயிலில் பயணம் செய்த சிலர் ரயில் பெட்டி ஒன்றினுள் கிடந்த பொதி ஒன்றை அவதானித்துப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததாகவும் —

இதனையடுத்துப் பொலீஸாரும், இராணுவத்தைச் சேர்ந்த குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் அந்தப் பொதியைப் பரிசோதனை செய்து அதிலிருந்த குண்டைச் செயலிழக்கச் செய்தனர் எனவும் — புத்தளம் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (இ-9)

# மன்னிப்புச்சபை தெரிவித்த குற்றச்சாட்டு ஆதாரமற்றது

## ரெலோ இயக்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 6

இலங்கையில் வடக்கு—கிழக்குப் பகுதியில் எங்குமே எமக்கு சட்ட விரோதமான தடுப்பு முகாம்களோ, வதை முகாம்களோ இல்லை. அப்படி ஒரு முகாமில் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் பெயர் விவரங்கள் மற்றும் சாட்சியங்களை வெளியிட மன்னிப்புச்சபை தயாராக உள்ளதா? —

இப்படி கேள்வி எழுப்பியுள்ளார் ரெலோ அமைப்பின் முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம்.

புளொட், ரெலோ ஆகிய அமைப்புக்களுக்கு வடக்கு—கிழக்குப் பகுதிகளில் வதைமுகாம்கள் இருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக்கை தொடர்பாக ரெலோ அமைப்பு விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்படும் அரச படைகளுடன் நாம் இணைந்து செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதுவும் தவறான ஒன்றாகும். எமது அலுவலகங்களின் பாதுகாப்புக்காக மட்டுமே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மண்எண்ணெய் கொண்டு செல்ல அனுமதி இல்லை

வவுனியா, செப் 16

வவுனியாவில் அரசு அறிமுகம் செய்துள்ள எரிபொருள் கட்டுப்பாட்டினால் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்

## பலாலியில் மாலை அணிவித்து வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 6

சென்னை செங்கல்பட்டு ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி விருபாக்ஷானந்திஜி தலைமையிலான இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் குழுவினர் ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலி வந்து சேர்ந்த அவர்கள் பலாலியில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் மற்றும் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்தசுவாமி சித்ரூபானந்தா ஆகியோரால் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸார் - படையினர் கூட்டாகச் சோதனை

## திருமலையில் பலர் கைது

திருகோணமலையில் பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் கூட்டாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பலர் கைதாகியிருப்பதாகவும் — கைதுசெய்யப்பட்டவர்கள் கொழும்பிலும், திருகோணமலையிலும் பல தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள் எனவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கைதாகியிருப்பவர்களில் சிலர் கொழும்பு நகரின் முக்கிய இடங்களைப் புகைப்படம் எடுத்தும், வீடியோ படம் எடுத்தும் விடுதலைப் புலிகளுக்கு வழங்கி வந்தார்கள் எனவும் — பொலீஸார் கூறுகின்றனர். (இ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் இலகுப்பிள்ளை

வேலணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இலகுப்பிள்ளை 04-09-98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், தவமணிதேவி கந்தசாமி (கொக்குவில்), காந்திமலர் சண்முகநாதன் (சுண்டுக்குளி), வசந்தாதேவி அருளானந்தம் (திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (6-09-98) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். அவரது துக்க நிகழ்வு இல. 227, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் அன்னாரது மகளின் இல்லத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி காந்திமலர் சண்முகநாதன்
(மகள்)

(58987)

## லூகாஸ் மரியாம்பிள்ளை

யாழ். பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த லூகாஸ் மரியாம்பிள்ளை (மாஸ்டர்) நேற்றுக் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பவா, ராணி, பவி, ராசன், செல்வம், குமார், உதயன், விசயன், சுகிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அந்தோனிப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06-09-98) பிற்பகல் 3.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக யாழ்ப்பாணம் செஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

61, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4783)

## சின்னையா சேனாதிராசா

(ஓய்வுபெற்ற புகையிரத பிரதம பாதுகாவலர்)

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா சேனாதிராசா 2-9-98 இல் காலமானார்.

அன்னார் குலஞானாம்பாவின் பாசமிகு கணவரும், நித்தியானந்தன (உதவிப் பொறியியலாளர், நீர்வடிகாலமைப்புச் சபை மன்னார்), ரதிதேவி, சிறிஸ்கந்தன் (எழுதுநர் K.C.W., கலாதேவி (ஆசிரியை யா/முத்துக்குமாரசுவாமி ம. வி. கைதடி), சியாமளாதேவி (ஆசிரியை சித்திவினாயகர் இந்துக் கல்லூரி மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரி ஆசிரியை புனித சேவியர், கல்லூரி மன்னார்). காலஞ்சென்ற சிறிஸ்கந்தா (நீர்ப்பாசனப் பொறியியலாளர், மன்னார்), பகவதி (ஆசிரியை யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி), சண்முகானந்தன் (எழுதுநர், காணி/மாவட்டப் பதிவகம் யாழ்ப்பாணம்), பவளநாதன் (பயிலுநர், பரிசோதகர் தேசிய பயிலுநர், சபை கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும், காயத்திரி, சிவாகரன், அச்சுதை, நவதர்ஷன், நிதிலா, சஜலக்ஷி, சஜகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பகவதிப்பிள்ளை, காலஞ்சென்ற இராசதுரை (முன்னைநாள் விவாகப் பிறப்பு, இறப்பு பதிவாளர் நாவற்குழி), காலஞ்சென்ற தங்கலட்சுமி, விசுவநாதர் (ஓய்வூதியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8-9-1998 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கைதடி ஊரதல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சே. சிறிஸ்கந்தன்
(மகன்)

கைதடி தெற்கு,
கைதடி.

(58971)

## திருமதி சரஸ்வதி தியாகராஜா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தியாகராஜா 05-09-98 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் கலட்டி தில்லையம்பலம் தியாகராஜாவின் அன்பு மனைவியும், திருமதி சசிகலா, திருமதி சுபத்திரா (யாழ். பொது நூலகம்), சுதர்சன் (ஜேர்மனி), திருமதி சுமதி (யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்வானந்தா (நில அளவையாளர், பகுதி), மகேஸ்வரன் (நாவற்குழி பிரதேச சபை நூலகம்), செல்வகுமார் (ப. நோ. கூ. சங்கம் சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அம்பலவாணர், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், மற்றும் சண்முகலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஜனகன், அபீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06-9-98) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. தியாகராஜா
(கணவன்)

31/9, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(58992)

---


## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.
இன்று முதல்
சரத்குமார் - கௌதமி
ரேகா, கவுண்டமணி
மன்சூர் அலிகான்
நடித்த
**இது தாண்டா சட்டம்**
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4778)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று முதல்
அர்ஜுன் - தபு
நடித்த
**தாயின் மணிக்கொடி**
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228
(58891)

## NIRU TUTION CENTRE

KONDAVIL

இணைந்த கணிதம்
(பகுதி)
நேர்கோட்டியக்கம்
[ V T. GRAPH ]
ஆரம்பம்:
07 - 09 - 98
திங்கள் 3-30 p m
A. பத்மநாதன்
(58948)

## BOSCO

25, றக்கா றோட்.

SPOKEN ENGLISH
by: **BRITTO**
புதிய பிரிவு
Mon., Wed 4-30
நடைபெறுகின்றன.

தமிழ் ஆங்கில
தட்டச்சு வகுப்புகள்
ஆரம்பம்: 07-09-98
தினமும் காலை
8-00 – 12-00 வரை
(58989)


## விருது வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், செப். 6

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 1998 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டு கொழும்பு சென்று அந்த விருதினைப் பெறமுடியாத ஆறு பேருக்கும்—

கொழும்பு அருள் நெறி விழாவில் இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் விருதினை நேரில் சென்று பெற முடியாத மூன்று சமய நூல் எழுத்தாளர்களுக்கும்— விருது வழங்குவதற்காக யாழ். அரசாங்க செயலகம் நடத்தும் விருது வழங்கும் விழா இன்று காலை 10.00 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

இந்த விழாவில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், இந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(இ-7)


## நீரிழிவுக்கு இயற்கை மருத்துவம்

## டயமோலா

ஆயுர்வேதத் தயாரிப்பான டயமோலா இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்தி களைப்பு, பலஹீனம் கை, கால் விறைப்பு, பார்வை மங்கல், ஆறாத விரணங்கள் போன்றவற்றை நீக்க வல்லது. மாத்திரைகள், ஊசி இவற்றிற்கு அவசியம் ஏற்படுத்தாத பாதுகாப்பான இலகு சிகிச்சை முறையாகும்.

**MAGNETO - DIABETIC BELT**

இப்பட்டியை தினமும் அணிந்து வருவதனால் கணையத்தின் தொழிற்பாடு, இரத்தோட்டம் ஆகியவை சீர்செய்யப்பட்டு உடலின் வேதனைகள், விறைப்புகளை நீக்கி நீரிழிவைக் கட்டுப்படுத்துகின்றது.

**மங்களபதி வைத்தியசாலை**
பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்.
3/13 PINWATA ROAD, DEHIWALA.
T. P. : 717842, 074 203370
(58985)

## தாதியர் தேவை

★ தாதியாக பயிற்சி பெற விரும்புவர்கள்
★ தாதியாக பயிற்சி பெற்றவர்கள்
★ மருந்து விற்பனையில் அனுபவமுள்ளவர்கள்

09 09 98 காலை 11 மணிக்கு முன் நேரில் வரவும்.

**சம்பந்தர் மொடோர்ன் வைத்திய நிலையம்**
08., இராமையார் செட்டியார் ஒழுங்கை,
[சாந்தி தியேட்டர் ஒழுங்கை]
யாழ்ப்பாணம்.

(58976) நிர்வாகி


## கேள்வி அறிவித்தல்

### சாவகச்சேரி பிரதேச சபை -- கொடிகாமம்

### கொடிகாமம் நவீனசந்தை அமைத்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவரினால் 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி முற்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு பிற்பகல் 2-00 மணிக்கு கேள்விச்சபையால் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமுகம் அளிக்கலாம்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கான தரம் 7 (ஏழு) லும் அல்லது அதற்குமேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவராவார்.

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்குமுன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கிய பதிவுப்புத்தகத்தினை கேள்விக்காரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரிப் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையில் 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையிலுள்ள கேள்விப்பத்திரக் கட்டணத்தையும், கேள்விவைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உண்டு. மேலதிக விவரங்களை சாவகச்சேரிப் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
| --- | --- | --- |
| கொடிகாமம் நவீன சந்தை அமைத்தல் | 500.00 (ஐந்நூறு) | 25,000.00 (இருபத்தையாயிரம்) |

- அன்ரன் பொன்னையா
தலைவர்
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்

சாவகச்சேரி பிரதேச சபை,
[illegible]
கொடிகாமம்.
04-09-1998.

(சி/4782)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# வெளிநாடுகளில் தமிழின் சிறப்பைப் பரப்பிய

# தமிழ்த் தூதுவர் தனிநாயக அடிகளார்

## அவரது ஆவலும் அறிவும் வெற்றிதந்தன

சங்க இலக்கியங்கள் தமிழிலே எழுந்த தொன்மையான இலக்கியங்கள். இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்ட தமிழ்ச் செய்யுள்களின் தொகுப்புக்கள் அவை. தமிழ் மொழியின் பழைமையையும் சிறப்பையும் உலகம் அறிய இச் சங்க இலக்கியங்களே சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணியிலே சங்க இலக்கிய ஆய்வு தனியாகச் சிறப்பித்துக் கூறப்பட வேண்டிய ஒன்றாகும். இன்றைய அறிவியல் முன்னேற்றம் கணனியின் மூலம் உலகமெங்கும் பரவி வருகிறது. வேகமான செய்திப் பரிமாற்றம் காரணமாக யாவற்றையும் 'இன்ரர் நெற்' வலையில் இணைக்க வேண்டியுள்ளது.

இதனால் நமது முன்னோர்கள் செய்த ஆய்வுகளையெல்லாம் திரட்டித் தொகுப்பு நிலையிலே வழங்கவேண்டியது இன்றைய தமிழாய்வாளர்களின் கடமையாகிறது.

அடிகளார் சேவியர் என்ற பெயரில் புனித பத்திரிகியார் கல்லூரியில் கல்வி பயின்றார். பிறமொழிகளிலேயூவல்லவராக இருந்தார். இலத்தீன் மொழி, இஸ்பானியமொழி, போர்த்துக்கேய மொழி, பிரெஞ்சுமொழி, இத்தாலிய மொழி, ஆங்கில மொழி, ஜேர்மன் மொழி போன்ற பல மொழிகளைத் தனது மேற் பட்டப் படிப்புக்காகப் பயின்றிருந்தார். அவருக்குப் 15 மொழிகள் தெரியும் என்றும் 30 மொழிகளைப் பயன்படுத்தும் ஆற்றல் உண்டென்றும் ஆயர் குலேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

(ஆனால் இது பற்றியகருத்து வேறுபாடு காணப்படுகிறது) இன்னும் குருமடம் ஒன்றில் ஐந்து ஆண்டுகள் கற்ற மறைக்கல்வியும் அவருக்கு ஒரு பரந்த மனப்பான்மையைக் கொடுத்தது. இதனை அடிகளாரே தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

> யாழ்ப்பாணம் புனித சவேரியர் மருத்துவக் கல்லூரி தனிநாயகம் தமிழ் மன்றத்தின் ஆதரவில் ''இலக்கிய ஆய்வும் தனிநாயக அடிகளாரும்'' என்ற பொருளில் நிகழ்த்தப்பட்ட நினைவுப் பேருரையில் இருந்து தொகுக்கப்பட்டது.
>
> தொகுத்தவர்;
> நெடுந்தீவு லக்ஸ்மன்

பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

''உரோமை மாநகரில யான் உறைந்த குருமடத்திலும் திருமறை நூற்கல்வி பயின்ற பல்கலைக்கழகத்திலும் நாற்பத்து மூன்று வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்தோர் என்னுடன் மாணாக்கராய் இருந்தனர். அவருடன் ஐந்து ஆண்டுகள் (1934 — 1939) வாழ்ந்ததன் பயனாகவே பரந்த உலக மனப்பான்மை படைத்தேனாயினேன்— (தமிழ்த்தூது)

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பெற்ற கல்வி ஆய்வு நெறியியலே அவரைப் புதிய வழிக்கு அழைத்துச் சென்றது. கல்விப்புலமை பெறுவதற்காக அவர் செய்த ஏனைய முயற்சிகள் அவருடைய புலமையைத் தனியான ஆளுமை பெறச் செய்தன. வீ. ஐ. சுப்பிரமணியம் எழுதிய முகவுரையில் அடிகளாரின் புலமை பற்றிக் குறிப்பிடுவதுடன் அதற்கான புறச் சூழலின் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறார்.

### தமிழ்த்தூது

அடிகளார் தமது கல்விப் புலமையை ஏட்டுக்கல்வியால் மட்டும் பெற்றவரல்லர். தமது செயற்பாட்டின் தன்மையை மேலும் வெளிப்படுத்தும் வகையில் 1947 இல் தமிழ் இலக்கியக்கழகம் ஒன்றையும் உருவாக்கினர். தமிழ்ப் புலமையை வெளிநாடுகளிலும் புலப்படுத்தச் சுற்றுலா ஒன்றை மேற் கொண்டார். இதனை அவர் தமிழ்த் தூதாக மேற் கொண்டார். வெளி நாடுகளிலே தமது பேச்சாற்றலை நன்கு வெளிப்படுத்தியதுடன் தமிழ் இலக்கியம் பண்பாடு பற்றிய விரிவுரைகளை ஆற்றித் தமிழின் சிறப்பைப்பரப்பினார். தென் இந்தியப் பண்பாட்டு மரபு, தென்னிந்திய இலக்கியம், தென்னிந்தியாவின் அறியப்படாத இலக்கியங்கள் என்னும் தலைப்புக்களில் அவர் செய்த விரிவுரைகள் பல புதிய செய்திகளை வெளிநாட்டவர்க்குக் கொடுத்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

● வட-கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா தயாரிக்கவிருந்த ''தீர்ப்பு'' படத்துக்கு அரசு தடை விதித்துள்ளது.

★ ''தீர்ப்பு'' வெளியாக முன்னரே அது சம்பந்தமான தீர்ப்பு வெளியாகிவிட்டது!

● இலங்கை இனப் பிரச்சினையில் ராஜீவ் காந்தி தலையிட்டது தவறு என்கின்றார் முன்னாள் அமைச்சர் இந்திரஜித் குப்தா.

★ தலையிட்டதே தவறா? அல்லது தவறான தலையீடா?

● குண்டு வெடிப்பின் மத்தியிலும் அயர்லாந்து சம்பந்தமான சமரச முயற்சிகள் தொடரும் என்கின்றார் பிரிட்டிஷ் பிரதமர்.

★ குண்டு வெடிப்பின் மத்தியிலும் சண்டை பிடித்தல் தொடரும் என்கின்றார் நமது ஜனாதிபதி.

● தேர்தலில் ஐ.தே.க. வெற்றிபெற்றால், எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகச் சொல்கிறார் ரணில் விக்கிரமசிங்கா.

★ தேர்தலில் வெல்லும் வரை — பேச்சு வார்த்தை; வெற்றியடைந்த பின் — போச்சு வார்த்தை!

● அதிரடித் தேர்தலொன்றை இவ்வாண்டின் முடிவில் நடத்துவதற்கு அரசு திட்டமிடுகின்றது.

★ அது எதிரடித் தேர்தலாகவும் மாறலாம்!

● நாலு ஆண்டுகளின் பின்னர் எதிர்பாராத விதத்தில் சந்திரிகாவும், அனுராவும் சந்தித்து உரையாடினர்.

★ எதிர்பார்க்கவுமில்லை; எதிர்ப்பைப் பார்க்கவுமில்லையோ?

● டென்மார்க்கிலே புகலிடம் மறுக்கப்படும் இலங்கையர், இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படுவர்; அவர்கள் வேறு எந்த ஒரு நாட்டிற்கும் செல்ல முடியாது.

★ இ' தென் (ன) மார்க் (கம்)! உலகின் சட்டாம்பிள்ளை எனத் தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்காகூட இப்படிக் கொடுமையான ஓர் ஏற்பாட்டைச் செய்யவில்லையே!!

● இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியைப் பொறுத்தவரை அகதி முகாம்களில் இருப்போருக்குமட்டுமே இனிமேல் நிவாரணம் வழங்கப்படுமாம்.

★ இனிமேல் அகதி முகாம்கள்தான் ஈழத் தமிழரின் ''பாரம்பரியத் தாயகமாக'' வேண்டும் என்று அரசு திட்டமிடுகிறதோ?

● உலக பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அணிசேரா நாடுகள் தமக்குள் நல்லுறவை வளர்க்க வேண்டும் என்கிறார் சந்திரிகா.

★ அணி சேரா நாடுகள் இவ்விஷயத்தில் அணிசேர வேண்டுமாம்! அப்படித் தானே...!

● ரஷ்யாவில் பொருளாதார அரசியல் நெருக்கடிகள் மோசமடைந்து, உத்தியோகபூர்வ அரசாங்கம் இல்லாத நிலையில் ஜனாதிபதி பில் கிளின்ரன் அங்கு செல்கிறார்.

★ எரிகின்ற வீட்டில் என்னத்தைப் பிடுங்கலாம் என நோட்டம் விடுவதுதான் அவரது நோக்மாக இருக்கலாம்.

● இஸ்லாமிய தத்துவத்துக்கும் நபி பெருமானாரின் போதனைக்கும் அரசியற் சட்டத்தில் முதலிடம் கொடுக்கும் நவாப் ஷெரீப்பின் முயற்சியைப் பாகிஸ்தானிய எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன.

★ அரசியலில் 'மதம்' கலப்பது அவர்களுக்குச் சம் 'மதம்' இல்லை!

— இடியன்

# ஆனைக்குட்டி, நரிக்குட்டி சுவாமிக்கு

# அருள் சுரந்த தவ விருட்சம் பூவரசு

சந்நிதிஎன்ற சொல்லுக்கு அருகு, சமீபம், மூலஸ்தானம் என்று பல பொருள்களுண்டு. யார்சந்நிதி முருகனை நினைக்கின்றார்களோ? அவர்களுக்கு அருகே முருகன் ஓடோடி வந்து விடுகிறான். அல்லது அவர்களைத் தம்மருகே இழுத்துக் கொள்கிறான் இவ்வுண்மையை இன்றும்பலர் தமதுசொந்தஅனுபவத்தில் உணர்ந்து கொண்டிருக்கின்றனர். இப்பேருண்மையை அனுபவித்த அடியார் ஒருவர் சந்நிதியானை பின்வருமாறு போற்றுகின்றார்.

''செல்வச் சந்நிதி எனச்
செய்வினை எல்லாம் மாளும்;
செல்வச்சந்நிதி எனத்
தீராநோய் தீர்ந்து விடும்;
செல்வச்சந்நிதி என சித்தி
எல்லாம் கைகூடும்;
செல்வச்சந்நிதி வேலோன்
திருவருட் சிறப்பினாலே''

ஈழத்தின் தென்பால் அமைந்த கதிர்காமத்திற்கு எவ்வளவு சிறப்புண்டோ அத்தகைய மகிமை ஈழத்தின் வடபால் அமைந்துள்ள சந்நிதியானுக்கும்உண்டு. பூசை முறையில் கதிர்காமத்தானும் சந்நிதியானும் ஒத்திருக்கின்றனர். ''சும்மாஇரு'' என யோகர் சுவாமி காட்டிய மௌனத்தின் மூலமே இவ்விரு தலங்களிலும் பூசை நடைபெறுவது சிறப்பாக இருக்கும். இது மனச்சாந்தத்தையும் உண்டாக்குகிறது.

இதனால் போலும் யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனையில் ''சஞ்சலம் வந்தால் வரட்டும் வேல் வேல் சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு'' என பாடியுள்ளார்.

சந்நிதியின் மேற்குப்புறத்தில் தவ விருட்சமாகிய பழைய பூவரசு மரமுள்ளது. இப்பூவரசு மரத்தின் நிழலில் கடுந்தவமியற்றி 'ஐராவசு' முத்தி அடைந்தாரென ஆலய புராணம் கூறுகின்றது. பூவரச மர நிழலில்

ம. சிவயோகசுந்தரம்

நாகதம்பிரானும் நவககிரகங்களும் வீற்றிருக்கின்றன.

''சும்மா இரு சொல்லற
என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும்
அறிந்திலனே''

என்கிறார் அருணகிரியார். வெளிநாட்டிலிருந்து யோகர்சுவாமிகளை நாடி அருள்பெற வந்த ஜேர்மனைச் சேர்ந்த கௌரிபாலர் என்பவரை ''சும்மா இரு கௌரிபாலா'' என ஆசி கூறி இவ்விடத்தில் தியானம்செய்யுமாறு யோகர் சுவாமிகள் பணித்தார். சும்மா இருந்து இறை சுகத்தைப் பெற்ற கௌரிபாலர் சும்மாவிருக்க ஒரு சூத்திரம் எனும் நூலையும்வெளியிட்டு கையிலும் 'சும்மா இரு' என பச்சைகுத்தி இறுதிக் காலம்வரை சந்நிதியானுடனேயே சழித்து அவன்தாள அடைந்தார்.

இதுபோல லண்டனைச் சேர்ந்த சோல்பரிப்பிரபுவின் மகன் ஆனைக்குட்டிச் சுவாமி என அழைக்கப்பட்டு இவ்விடத்தில் சிலகாலம் தவமியற்றினார். மேலும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ''நரிக்குட்டி சுவாமிகள்'' தென்னிந்தியாவைச் சேர்ந்த பன்றிக்குட்டி சுவாமிகள் என்போரும் சந்நிதி பூவரச மரத்தின் கீழேயே யோகரின் கட்டளைப்படி தவமியற்றினார்கள்.

சந்நிதி முருகன் குடிகொண்ட பூவரச மரம் ஞான ஒளி காலும் விருட்சமாக விளங்கும் சிறப்புடையது. வெளிநாட்டு ஆன்மீக புருஷர்கள், தவயோகிகள் கந்தனின் கருணைக் கடலில் மூழ்கித் திளைத்தனர். சந்நிதி மண் தவமுடைய பூமி, அங்கு ஒரு முறை சென்று முருகனைத் தரிசித்தால் போதும். பாவங்கள் நீங்கி கோடி புண்ணியம் சேரும்.

கோயில்களில் சந்நிதி உண்டு ஆனால் சந்நிதியையே கோயிலாகக் கொண்டவன் சந்நிதியான். இன்றும் வாய் கட்டி மௌன நிலையில் பூசை நடைபெறும் செல்வச் சந்நிதியானுக்கு சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய போட்டோஸ்ரற் மெசின் (Photo State Machine) Model SF1016. 780 C/O உதயன, யாழ்ப்பாணம். (58944)

### காணி விற்பனை

யாழ். திருநெல்வேலிச் சந்திக்கும் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்துக்கும் இடையில் ஆடியபாதம் வீதியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. தங்கமாமயிலோன், பிரசித்த நொத்தாரிஸ், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (58966)

### வீடு வாடகைக்கு

மார்டடினவீதயில் நாலகு அறைகள், கிணறு என்பவற்றைக் கொண்ட ஒரு வீடு வாடகைக்கு விடப்படும் தொடர்பு கொள்ளவும்: 26 சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (58965)

''பதமினிவாசா'' KKS றோட். கோண்டாவில மேற்கில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: K ஜெயராஜ், KKS றோட். கோண்டாவில் மேற்கு [EXPO வீடியோ சென்டருக்கு அண்மையில்] [58967]

### மணமகள் தேவை

இங்கிலாந்தில் நிரந்தர வதிவிட அந்தஸ்து, நிரந்தர தொழில் உள்ள 30 வயது பட்டதாரிக்கு நலல குடும்பத்தைச் சேர்ந்த படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும். தெரிவு செய்யப்படாதவை திருப்பி அனுப்பப்படும். விளம்பரதாரர் இல. 782 மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம. (58947)

### English - சிங்களம

ஆண்டு O/L வரை எல்லா வகுப்பினர்களுக்கும் English Test Spoken, A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலக்கணத்துடன் ஆங்கிலமும், சிங்களமும் கற்பிக்கப்படும். ஆசிரியர் ஷண், இல. 23, டச் வீதி, சாவகச்சேரி. (சி/4768)

UNIVERSITY OF JAFFNA SRI LANKA

## NOTICE

FACULTY OF MEDICINE

**COMMENCEMENT OF LECTURES**

The Lectures for the 1997 batch [New Admission] of students will commence on 6th October 1998.

Registrar.

04-09-1998

(C/4773)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில ஆங்கிலம் பயில, ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி திங்கள், செவ்வாய், புதன் மாலை 5-30 வகுப்புகள் ஆரம்பமாகி உள்ளன. நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை நிகரை வைரவர் கோயில் முன்பாக. (58918)

### O/L கணிதம்

Distinction பெறுபேறடைவதற்காக 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா விடையும் Tuted & Timeing Practice உம் 20 நாள்களில தொடர் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன், கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (58940)

### தேவை

யாழ் நகரிலுள்ள வீடொன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவைப்படுகிறார். தொடர்பு: இல. 779, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (58943)

### இறைச்சிக் கோழி

இறைச்சிககோழி (Broilers) விற்பனைக்கு உண்டு கல் பேட், சேவல் இன கோழிகளும் உண்டு, தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சின்னக் கடைக்கு அருகில்) (58919)

இன்று முதல் இறைச்சிக் கோழிகளை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர். (58923)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (58969)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Hyline Brown கோழிக் குஞ்சுகளை Prima/Bairaha Broiler குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (58924)

# வை. கோவும், வாஜ்பாயும் புலிகளுக்கு ஆதரவாம்!

## சுவாமி கூறுகிறார்

சென்னை, செப். 6

விடுதலைப்புலிகளுக்கு இந்தியாவில் இருந்து மருந்துப் பொருள்கள், டீசல், ஆயுதங்கள் ஆகியவற்றை அனுப்புவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது பற்றி மதி.மு.க. கட்சி பொதுச் செயலர் வை. கோபாலசாமிக்கும் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கும் இடையேஒப்பந்தம்ஒன்றுஏற்பட்டுள்ளதாக ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

சென்னையில் அ.தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதாவுடன் தற்போதைய அரசியல் நிலை குறித்துப் பேச்சு நடத்திய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மீது வாஜ்பாய் அரசு மென்மையான போக்கைக் கடைப்பிடித்து வருவது பற்றி ஜெயலலிதவிடம் விளக்கியதாகவும் -

வாஜ்பாய்க்கும் வை. கோபாலசாமிக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் காரணமாகவே ம.தி.மு.க தொடர்ந்து பா.ஜ.க அரசுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும்;

பா.ஜ.க அரசுக்கு அ.தி.மு.க. கூட்டணி அளித்து வரும் ஆதரவு இன்னும் பரிசீலனையிலேயே இருப்பதாகவும்—

சுப்பிரமணிய சுவாமி மேலும் தெரிவித்தார். (ஐ-6)

## மாதாந்தக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 6

நல்லூர் பிரதேச சபை நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் உப அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

'அறிவு வளர்ச்சியில் வாசிப்பு நூலகங்களின் பங்களிப்பு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர் செல்வி விமலாம்பிகை நாகேசு உரையாற்றுவார். (ஐ)

## "சிவநெறி கல்வி நிலையம்"

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை

06 09 98 ஞாயிறு பி.ப. 2 மணி

வினாத்தாள் தேவையான நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளலாம்

(58973)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கலாதேவி சண்முகானந்தன்
அவர்களின் தந்தையார்

### சி. சேனாதிராசா

அவர்கள் சிவபதமடைந்தமையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்
கைதடி.

(58974)

## பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்தி விநாயகர் (பெரிய பிள்ளையார்)

தேவஸ்தான பரிவாரமூர்த்தி எழுந்தருளி

## வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானின் கும்பாபிஷேகப்பெருவிழா

காலம்: 06 – 09 – 1998 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-04 மணிமுதல் 10-34 வரை
அனைவரும் வந்து அருள் பெற்றுய்யவும்.

பிரதிஷ்டாகுரு
சிவப்பிரம்மஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள் (சாரதாபீடம்)

தேவஸ்தானகுரு
சாமி சக்திதாஸ சர்மா
பா. கணேசலிங்கம் குடும்பத்தினர்

மங்கள வாத்தியம்
சின்னராசா குழுவினர்
S. விஜயகுமார் குழுவினர்

விழா உபயகாரர்களும்,
பரிபாலன சபையினரும்.

(58983)

## முதல் வருட நினைவஞ்சலி



தாயின் மடியில் 14 – 01 – 1930

மண்ணின் மடியில் 18 – 08 – 1997

அமரர்

### முருகுப்பிள்ளை கதிர்காமத்தம்பி

அன்பின் ஊற்றாய், பண்பின் அருவியாய் வீட்டின் குலவிளக்காய் வாழ்ந்த எம் தெய்வத்தை பாதையில் பாவி காலன் பாதியில் பறித்திட்டானே! என்றும் எம் கண்ணில் நிழலாய் வர நித்தமும் உங்களை நினைக்கின்றோமே!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(58929)

## சந்நிதியானுக்கு ஒரு பறவைக்காவடி இன்று



நாட்டில் அமைதி வேண்டி செல்வச்சந்நிதி முருகனுக்கோர் பறவைக்காவடி

### இன்று காலை யாழ். முனியப்பர் கோயிலில்

இருந்து ஆரம்பமாகி சந்நிதி வரை நடைபெறும்.

அத்தருணம் கற்பூரச்சட்டி, காவடி, நேர்த்திக் கடன்களைச் செலுத்தவுள்ளோரும் எமது காவடியுடன் இணைந்து செல்வதை வரவேற்கின்றோம்.

பறவைக் காவடி செல்லும் வழியில் சந்நிதியான் அடியார்கள் அணி அணியாய்த் திரண்டு வாரீர்! நாட்டில் அமைதி வேண்டி சந்நிதியானடி பணிந்திடுவோம்!!

சந்நிதியானடியான்
அன்பர்
சி. சி. நடராசா

(58953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். அஞ்சனந்தாழ்வு

## ஆரோக்கிய அன்னையின் வருடாந்தத் திருவிழா

16-09-98ஆம் திகதியன்று ஆரம்பமாகி 20-09-98ஆம் திகதியன்று காலை திருப்பலியுடன் நிறைவு பெறும்.

— பங்குத் தந்தை

அன்னை செய்த நன்மைகளுக்காக நன்றியுடன் பிரசுரிக்கின்றோம்.

அ. இம்மானுவேல் குடும்பத்தினர்,
கொட்டடி.

(58958)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28 — 03 — 1936 | 28 — 08 — 1996 |

**திருமதி இரத்தினபூபதி சுப்பிரமணியம்**

[ஓய்வுபெற்ற ஆசிரியை (பண்டிதை),
கொக்குவில் இந்துக் கல்லூரி]

திதி ஆவணிப் பூரணை 06 - 09 - 1998

காலத்தை வென்று நிற்கும் கருணை
ஞாலத்தைக் கடந்து நிற்கும் அன்பு
கோலம் என்றும் எம்மனத் திரையில்
வேலன் திருவடியில் நீ வாழ்தி அம்மா!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

பிரிவில் துயருறும்
குடும்பத்தினர்.

ஞானவயிரவர் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(58952)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**இரத்தினம் ஜெயன்**

(வர்த்தகபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 - 10 - 1972 | 06 - 09 - 1996 |

பால் வழியும் முகம் எங்கே? — எம்
குல விளக்கே நீ எங்கு சென்றாய்?
பாரினிலே பலகலையும் கற்றிடுவாய் என்றிருக்க
பாசத்தை வளர்த்து எம்மை
பரிதவிக்க விட்டாய் ஐயா!
கவலைகளை ஓட்டும் உன் புன்சிரிப்பு எங்கே?
பாசத்தை மறந்து பாதியில் சென்றதேனோ?
கூடி மகிழ விரும்பாமல் கூறாமல் சென்றதேனோ?
ஆறாத்துயரமதில் எம்மை ஆழ்த்தி விட்டுச்
சென்றதேனோ?
விதி என்ற சதி எங்கள் வாழ்க்கையிலே விளையாடி
விளைத்திட்ட கோலம் தான் வினைப்பயனோ?
மன்றாடி நின்றோம் மறுத்திட்டான் காலதேவன்
உன் கனவை நனவாக்க உன்னாசி வேண்டி நிற்கும்

- குடும்பத்தினர்

கைதடி தெற்கு, கைதடி.

(58949)

## லைசென்ஸ் பத்திரங்கள் தேக்கம்

தென்மராட்சி, செப். 6

தென்மராட்சிப் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் இவ்வருடத்திற்குரிய (1998) வாகன வரி செலுத்திய வாகனங்களில் பொருத்த வேண்டிய லைசென்ஸ் பத்திரங்கள் வாகன உரிமையாளர்களால் பெறப்படாமல் தேங்கியுள்ளதாகவும், இவற்றை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வரி செலுத்திய பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலக போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(ஐ-117)

## பொதுமக்கள் தொடர்பு இடை நிறுத்தம்

நவாலி, செப். 6

யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் திணைக்களப் பிரிவு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் யாவற்றையும் கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டி உள்ளதாம். அதனால் பொதுமக்களுடனான தொடர்புகள் யாவும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களத்தின் உதவிஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-100)

## செயலகத்தில் வர்த்தகக் கிளை

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். செயலக ஊழியர்களின் நன்மைகருதி அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் சிறிய வர்த்தகக் கிளை ஒன்று யாழ். செயலகத்தில் நிறுவப்படவுள்ளது.

செயலக ஊழியர் நலன்புரிக் கழகத்தினால் இந்த வர்த்தகக்கிளை நிறுவப்படவுள்ளது.

(ஐ-5)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், செப். 6

தென்மராட்சிப் பகுதி "கெல்ற்" மாணவர்களின் ஒன்றுகூடல் அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் கோ. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டத்தின் "கெல்ற்" இணைப்பாளர் எஸ் சிவகுருநாதன் கலந்து கொண்டார்.

(ஐ-8)

## முரளிக்கு பெருவரவேற்பு

கொழும்பு, செப். 6

இங்கிலாந்து-ஸ்ரீலங்கா கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் சாதனை புரிந்து நேற்று முன்தினம் நாடு திரும்பிய சுழல்பந்து வீச்சாளர் முத்தையாமுரளீதரனுக்கு கண்டியில்பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

திறந்த ஜீப்பில் அவர் அழைத்துச் செல்லப்பட்ட சமயம் சுமார் இரண்டு லட்சம் ஆதரவாளர்கள் வீதிகளில் இருமருங்கிலும் கூடியிருந்து பெருவரவேற்பு அளித்தனர்.

கண்டிநகரில் இதுவரை இப்படியான வரவேற்பு எதும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசி, சீனி, பருப்பு செயலகம் வழங்கும்

யாழ்ப்பாணம், செப். 6

ப. நோ. கூ. சங்கங்களுக்கு அரிசி, சீனி, பருப்பு உட்பட அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ப. நோ. கூ. சங்கங்கள் பிரதேச செயலர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் போன்றோரின் சிபார்சுகளுடன் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனி, அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் யாழ். செயலக களஞ்சியத்தில் போதியளவு கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-5)


## போட்டோ கொப்பி
**ரூபா 4.00 மட்டும்**

ஸ்ரீ முருகன் T. P. நிலையம், நீர்வேலி
கந்தசாமி கோயில் வடக்கு வீதி.

(58916)


## திருமண வாழ்த்து

திருநெல்வேலி திரு. திருமதி எஸ். தணிகாசலம்
அவர்களின் கனிஷ்ட புத்திரன்

**செல்வன் செல்வக்குமரன்**
[ லண்டன் ]
அவர்களுக்கும்

உடுவில் திரு. திருமதி கே. பரராஜசிங்கம்
அவர்களின் கனிஷ்ட புதல்வி

**செல்வி யமுநாநிதி**
[ லண்டன் ]
அவர்களுக்கும்

06 - 09 - 1998 ஞாயிற்றுக்கிழமை இன்று

[ Vaughan Nursery, The Gardens. west Harrow, middlesex, HA14EL ]

திருமணம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

மணமக்களை தலங்காவல் பிள்ளையார், ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மன், நல்லைக்குமரனின் அருள் பெற்று நீண்ட ஆயுளுடனும் சகல சௌபாக்கியங்களுடனும் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

மணமகளின்

| | |
|---|---|
| மைத்துனர்: | திரு. க. கணேசநாதன். |
| சகோதரிகள்: | திருமதி க. ஞானசக்தி, செல்வி த. ஆனந்தசக்தி. |
| மருமகள்: | செல்வி க. விஷாலினி. |

புலவர் வளவு,
528, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

[58917]


**JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE**
MARUTHANARMADAM,
CHUNNAKAM.

## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

Short Course in Agriculture

இலவச குறுகிய கால விவசாயப் பயிற்சிநெறி

4 மாத காலம் பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம், விவசாய மூலதத்துவம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய இலவச சாதனா. போதனா பயிற்சி நெறிக்கு க. பொ. த. (சாதாரணம்) கல்வி கற்ற 16 — 26 வயதிற்கு இடைப்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சிநெறிக் காலத்தில் உதவு தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 14 - 09 - 1998 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு எமது நிறுவனத்தில் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு சான்றுப் பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரங்கள், கிராம சேவகரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:

அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார் மடம், சுன்னாகம்.

(சி/4755)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண

# தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி தி

## வாழ்த்துச் செய்திகள்

யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் அமைந்துள்ள ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கடந்த 27 ஆண்டுகளாக அமைதியான முறையில் மக்கள் சேவையில் ஈடுபட்டு பல வழிகளில் தொண்டாற்றி வருவதை அப்பகுதி மக்கள் அனைவரும் அறிவர்.

இவ்வாச்சிரமத்தில் தற்பொழுது ஒரு புதிய பிரார்த்தனை ஆலயம் அமைக்கப்பட்டு அதன் கும்பாபிஷேக விழா இன்று செப்டெம்பர் 6 ஆம் திகதியன்று நடைபெற உள்ளதாக அறிகிறோம்.

விழா சிறப்புடன் நடந்தேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வாச்சிரமத்தைத் திறம்பட, பக்தி சிரத்தையுடன் நடத்திவரும் வண. சுவாமி சித்ரூபானந்தஜி மகராஜ் அவர்களுக்கும் இம்மகிழ்ச்சியான தருணத்திலே எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இறையருளினால் அவரது பணிகள் மேலும் வளர்ந்தோங்குக!

சுவாமி ஆத்மகணாநந்தா
உப தலைவர்,
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.



### From Tamilnadu

My dear Maharaj

I am very glad to learn that the newly built temple is being dedicated on 6th September 1998.

Worshiping of Images of Gods and Goddesses in the temple is an ancient tradition in India. Though the idea that god pervades the whole universe exists a devotee is satisfied only by worshiping god in the Images. He wants god in a divine form so that he may pray, worship and serve Him in the Image to his heart's content. This temple is a place for all castes, creeds and religions where all can come and pray to their heart's content.

The Lord says:

"He resides where His devotees praise his glories. He does not live only in the hearts of Yogis and in the vaikuntha." In the Gita, Bhagavan Sri Krishna also assures what he accepts an offering of a leaf, flower, fruit, water with ardent devotion.

May the functions organized in connection with the consecration of this temple may be successful.

Swami Virupakshaannda.
Ramakrishna Mission,
Chengalpattu, Tamilnadu.

### கோவை சுவாமிகள்

பருத்தித்துறையில் ஆச்சிரமம் அமைத்து அன்னை சாரதா தேவிக்கு ஆலயம் எழுப்பி, குடமுழுக்கு விழா எடுப்பதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. பாராட்டுக்களும் அன்பும் நல்வாழ்த்துக்களும்.

சுவாமி சோமானந்தா
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம், கோவை.

### From France

My dear Chidrupanandaji

I am happy to have received yor letter of14-07-1998. Glad to know that there will be many swamis for inauguration of the New Temple to Sri Sarada Devi.

May She shower all Her choicest blessings always on you.

May the function be a great success.

With love and greetings.
Swami Veetamohananda.
Centre Vedantique Ramakrishna,
Gretz, France.

## அன்னையின் பெருமை

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து இயங்குவது பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம். அன்னையின் ஆலய கும்பாபிஷேகத்தினை மிகச் சிறப்பாக இன்று நடத்துகிறது.

இத் தருணத்தில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் பவித்திரமான வாழ்வில் சில நிகழ்ச்சிகளை சைவ அன்பர்கள், பக்தர்கள் படிப்பது அவசியம். ஒரு தனி மனிதனை மிகவும் உச்சமாகப் புகழும் சமுதாய அமைப்பில் வாழும் நமக்கு அன்னை ஒரு பொழுதும் தனக்குப் பெருமையைத் தேட விரும்பவில்லை; இதனை அறவே வெறுத்தார்.

தன்னை மறந்த நிலையில் நமக்கு அவர் பராசக்தி, காளி தான் என்று இடையிடையே பகர்ந்திருக்கிறார். இதனைப் பக்திபூர்வமாக அறிய, நம்பிக்கை வைக்க நமது வாழ்வில் நமக்கு நிச்சயமாக ஈடேற்றம் உண்டு.

அன்னை பல இடங்களுக்குச் சென்று பால் வாங்கி வருவார். கிரீஷுக்குத் தெரியாமல் அவருடைய போர்வைகளை நாள் தோறும் தாமே துவைத்து வைப்பார். நாள் தோறும் தன் போர்வைகள் மிகவும் தூய்மையாக இருப்பதைக் கண்டு காரணம் தெரியாமல் கிரீஷ் ஆச்சரியப்படுவார். அத்தோடு சுவையான உணவை அன்னை தானே சமைத்து கிரீஷின் அருகில் அமர்ந்து வயிறு நிறைய உண்ணும்படி பரிமாறுவார்.

அன்னை கல்கத்தாவில் இருக்கும் போது உத்போதனுக்கு அடிக்கடி வந்து அவரைத் தரிசிப்பார். ஒருமுறை கல்கத்தாவில் இருந்து ஜெயராம்பாடிக்கு அன்னை புறப்பட்டபோது வழியனுப்ப வந்தவர், அன்னையைப் பார்த்து 'அம்மா நான் உங்களிடம் வரும் போதெல்லாம் ஒரு சின்னஞ்சிறு குழந்தை தன் தாயிடம் எவ்வளவு ஆனந்தத்தோடும் உற்சாகத்தோடும் ஓடி வருமோ அத்தகைய ஆனந்தத்தோடும் உற்சாகத்தோடும் ஓடிவருகிறேன். இப்போது நான் இளைஞனாக மட்டும் இருந்தால் உங்களுக்கு ஓடி ஆடி எல்லாவிதமான சேவைகளையும் செய்வேன். ஆனால் நானோ வயதானவன்; நீங்கள் எங்களுக்குச் சேவை செய்கிறீர்கள். நாங்கள் அதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறோம். இப்போது ஜெயராம்பாடியில் உள்ள மக்களுக்குச் சேவை செய்ய அங்கே போகிறீர்கள். அங்கே போனதும், அவர்களுக்காகச் சமையல் கட்டில் நின்று சமையலும் செய்யப் போகிறீர்கள். நான் எப்படித் தங்களுக்குச் சேவை செய்ய முடியும்? சேவை செய்வது என்ன என்பது பற்றித்தான் எனக்கு என்ன தெரியும்?' என்று கூறினார்.

பின்பு அங்கு அன்னையைச் சுற்றியிருந்த கூட்டத்தைப் பார்த்து உணர்ச்சியால் குரல் தழுதழுக்க — ''கடவுள் நம்மைப் போலவே மனித வடிவில் வருகிறார் என்பதை, நம்மைப் போன்ற மனிதர்களுக்கு நம்புவது கடினம். ஒரு நாட்டுப் புறப் பெண்ணின் வடிவில் இதோ நிற்கும் அண்ட சராசரங்களின் தாயாக பராசக்தியின் முன்னால், இப்போது நாம் நிற்கிறோம். உங்களால் உணர முடிகிறதா? இல்லை எனினும் இவர்தான் இந்த புவனங்களின் ஈஸ்வரியான புவனேஸ்வரி, மஹாமாயை, மஹாசக்தி, மனிதர்கள் நல்ல கதியை அடையவும். அதே நேரத்தில் பெண்மை என்னும் பண்பை உலகம் தெள்ளத் தெளிவாகவும், எளிமையாகவும் உணர்ந்து கொள்ளவும் அவதாரம் எடுத்திருக்கிறார்'' — என்றார்.

கிரீஷ் மேலே கூறிய வார்த்தைகள் சராசரி மனிதர்களின் அறிவுக்கு அனுமானிக்கும் அப்பாற்பட்டதாக இருக்கலாம். இது எப்படி இருந்தாலும் வாழ்வில் மிகுந்த கருணையும் எளிமையும் வடிவெடுத்தவராகவே வாழ்ந்தார் அன்னை தெய்வீக ஞானம் ஒன்றைத் தவிர வேறு வகையில் சராசரி மனிதர்களிடமிருந்து அவர் எந்த வகையிலும் வேறுபடவில்லை. தன் சீடர்களை ஞானம், பக்தி, ஆசையற்ற மனம் இவைகளை அடையுமாறு எப்போதும் அவர் ஊக்குவித்தார். தெய்வீகக் காட்சிகளையோ, அற்புத சக்திகளையோ தேடி அலையும்படி அவர் ஒரு போதும் கூறவில்லை.

தெய்வீகக் காட்சி தனக்குக் கிடைக்கவில்லையே என்று வருந்திய ஒரு பக்தருக்கு அவர் சொல்லியது போல், ''அந்தக் காட்சி ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல. அவை ஆன்மீக வாழ்வில் தானாகவே தோன்றும். ஆன்மீக வாழ்விற்கு அது மிகவும் முக்கியமானதல்ல'' என்பதாகும். அவரைப் பொறுத்தவரையில் உண்மையான ஆன்மீக வாழ்வின் பயனே வேறு. இதை மிகச் சரளமாகவும் சாதாரணமாகவும் அன்னை 'கடவுளைக் காண்பதால் ஒருவன் எதைப் பெறுகிறான்?' அவன் தலையில் இரண்டு கொம்புகளா முளைக்கின்றன? அவன் மனம் தூய்மையடைகிறது. அதன் மூலம் ஞானமும் தெளிவும் அவனிடம் விழித்தெழுகிறது என்று கூறியுள்ளார்.

தீட்சை வழங்குவதிலும் அன்னை பழைய சம்பிரதாயங்களையும், பூஜைகளையும் சடங்குகளையும் மிகவும் குறைவாகவே கைக்கொண்டார். மற்றப்படி அவர் எந்தச் சட்டத்தையும், சம்பிரதாயத்தையும் கடைப்பிடிக்காமல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பூஜை செய்யும் போதும் தீட்சையின் போதும் சமய சடங்குகளைக் குறைத்துக் கொள்ளவோ முற்றிலும் நீக்கவோ செய்வார். பல நேரங்களில் வீட்டில் உறவினர்கள் இறந்து துக்கம் கொண்டாடும் நாள்களிலும், பெண்களின் மாதவிலக்காகும் நாள்களிலும் மற்றும் அது போன்ற சம்பிரதாயதீட்டு நாள்களிலும் இந்தத் தடைகளை அன்னை பலமுறை விலக்கி இருக்கின்றார்.

ஒருமுறை அன்னை கங்கையில் குளிக்கும் துறையின் கீழ்ப்படியில் தியானத்தில் மூழ்கி உலகையே மறந்திருந்தார். இதைக்கண்ட அவருடைய சீடர் பேராசிரியர் கோகுல் தாஸ், உடனே அவருக்குச் சற்றுத் தொலைவில் அமர்ந்தபடி, அன்னை காளியின் புகழைப்பாடுகின்ற சண்டி மந்திரத்தை அன்னையைக் காளியாகவே நினைத்து தனக்குள் உச்சரிக்க ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் அன்னை கண்விழித்தபடி அவருடைய பிரார்த்தனைகளை ஏற்றுக் கொண்டு தானும் காளியும் ஒன்றே என்பதை அறிவிப்பவர் போல் கைகளை உயர்த்தி அவருக்கு ஆசிகள் வழங்கினார்.

அன்னை தன்னைத்தானே உயர்த்திக் காட்டும் இத்தகைய நிகழ்ச்சிகள், அன்னையின் மிகப் பரந்த உலக வாழ்வில் எப்போதோ சில நேரங்களில் எவ்வளவோ கால இடைவெளிக்குப் பின்பே நடந்துள்ளன. அவை சிலருக்கு ஆழ்ந்த பொருளற்றவைகளாகவும் தெளிவற்ற நிகழ்ச்சிகளாகவும் தோன்றலாம். அன்னை 'வாழ்ந்த காலத்திலேயே அன்னையிடம் உங்களைக் காளிதேவியென்றும், பராசக்தியின் அவதாரம் என்றும் கூறுகிறார்கள். எங்களால் உங்களை அப்படிக்காண முடியவில்லையே'' என்று நேருக்கு நேர் கேட்டார்கள். அந்தக்கேள்விக்கு அன்னை கூறியபதில் உண்மையியல்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

★



## 'சங்க ஜனனி' சார

புத்த கயையில் அன்னை
தேவி பிரபலமான ஒரு மடத்
நேர்ந்தது. அது சிறந்த வசதி
டப்பட்டிருந்தது. உணவுக்கும்
களுக்கும் உரிய ஏற்பாடுகள்
ருந்தன. இதைக் கண்ட அன்ன
தில் வேதனை மிகுந்த காட்சி
தது. குருதேவரை நம்பி, அ
மென்று தங்கள் படிப்பையும்,
களையும், உற்றார், உறவினரை
வந்த அவரது சீடர்களாகிய
கள் நாடு முழுவதும் அலைந்து
ருந்தனர். இக்காட்சி அன்னையின்
நீரை நிறைத்தது. தம் பிள்ளை
போல் மடங்கள் ஏற்பட வேண்
தாய்மை உணர்வு பீறிட்டுப் பெ
ளில் நீர் பெருகப் பிரார்த்தனை
அன்னையின் அந்தப் பிரார்
இன்றைய ராமகிருஷ்ண மடங்
திற்கும் வித்தாக அமைந்தது.

இதைப்பற்றிப் பின்னாளி
கூறினார்:

''ஓ! இதற்காக நான் குருதே
வளவு கண்ணீர் விட்டுப் பிரார்
தேன் தெரியுமா? அதன் பின்புத
அருளால் இந்த மடம் (பே
தோன்றியுள்ளது. குருதேவர்
னர் அவரது துறவிச் சீடர்கள்
வாசல் அனைத்தையும் துறந்து
வீட்டில் தங்கினார்கள். பின்ன
கையில் ஈடுபட்டவாறே, தனித்
கும் அங்கும் அலைந்து திரிந்த
என்னை மிகுந்தவேதனைக்கு உ

நான் குரு தேவரிடம் ''
நீர் வந்தீர், இவர்கள் சிலருடன்
புரிந்தீர். பிறகு மறைந்தும் வி
டன் எல்லாம் முடிந்துவிட
தானா? அதுதான் முடிவு எ
பூமிக்கு வந்து ஏன் இத்தனை
ஏற்றுக்கொள்ள வேண்டும்!
பிச்சையெடுத்துச் சாப்பிட்டுவி
யில் படுத்துக் கிடக்கும் துற
னையோ பேரை பிருந்தா
காசியிலும் பார்த்திருக்கிறேன்
சாதுக்களுக்கு இந்த நாட்டி
கிடையாதே! உமது பெயரில்
யும் துறந்த என் பிள்ளைகள்
பிச்சையெடுப்பதை என்னால்
கொள்ள முடியாது. உம்மிடம் எ
தனை இதுதான்! உமது பெய
லிக்கொண்டு உலகத்தைத் து
குச் சாதாரண உணவும், உடை
வேண்டும். அவர்கள் உமது உ
யும் இலட்சியங்களையும்மையம
ஓரிடத்தில் ஒன்று கூடி வசிக்
அதற்காகவே அல்லவா நீர் வ
கள் அலைந்து திரிவதைக் கா
சகிக்க முடியவில்லை'' என்று
தேன். அதன் பின்னரே நரே
யாக இதையெல்லாம் உருவ
என்றார்.

எத்தனை பொருள் பொதி
தனை! தாய்மையின் இயல்பா
பெருக்குடன் எழுந்த பிரார்த்
ஆனால் ராமகிருஷ்ண இயக்கத்
லட்சியங்களின் விழையும் எவ்வள
இந்தப் பிரார்த்தனையில் பொ
[சென்னை ஸ்ரீ ராம கிருஷ்ண ம
யீடாகிய '' அன்னை சாரதாதே
நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ா சாரதாதேவி சேவாச்சிரமத்தின்
# திருக்கோயில் கும்பாபிஷேக மலர்



## சாரதாதேவி

ன்னை ஸ்ரீ சாரதா
மடத்தைக் காண
வசதிகளுடன் கட்
வுக்கும் பிற தேவை
கள் செய்யப்பட்டி
அன்னையின் மனத்
ாட்சி ஒன்று எழுந்
, அவரே தெய்வ
யும், சொத்து சுகங்
னைரையும் துறந்து
கிய தம் பிள்ளை
லைந்து கொண்டி
னையின் கண்களில்
ள்ளைகளுக்கும் இது
வேண்டும் என்று
டுப் பொங்க, கண்க
த்தனை செய்தார்.
பிரார்த்தனைதான்
மடங்கள் அனைத்
ந்தது.
னாளில் அன்னை

குருதேவரிடம் எவ்
பிரார்த்தனை செய்
பின்புதான் அவரது
(பேலூர் மடம்)
தவர் மறைந்த பின்
ர்கள் தங்கள் வீடு,
றந்து ஒரு வாடகை
பின்னர் தவ வாழ்க்
தனித்தனியாக இங்
திரிந்தார்கள். இது
க்கு உள்ளாக்கியது.
ம் "ஓ பகவானே!
ருடன் விளையாடல்
தும் விட்டீர். அதனு
வுவிட வேண்டியது
டிவு என்றால் நீர்
னை வேதனைகளை
டும்! தெருக்களில்
ட்டுவிட்டு, மரத்தடி
துறவியர் எத்த
ந் தாவனத்திலும்,
கிறேன்! அத்தகைய
ாட்டில் குறைவே
யரில் அனைத்தை
ளகள் உணவுக்காகப்
னால் பொறுத்துக்
டம் எனது பிரார்த்
பெயரைச் சொல்
துறப்பவர்களுக்
உடையும் கிடைக்க
து உபதேசங்களை
மயமாகக்கொண்டு
வசிக்க வேண்டும்.
நீர் வந்திர்! அவர்
க் காண என்னால்
என்று பிரார்த்தித்
நரேன் படிப்படி
உருவாக்கினான்—

பொதிந்த பிரார்த்
ல்பான உணர்ச்சிப்
பிரார்த்தனைதான்!
பக்கத்தின் உன்னத
எவ்வளவு பாங்காக
பொதித்துள்ளது!
ண மடத்து வெளி
தாதேவி" என்ற
டது.]

## அன்னையின் அருட்பிரவாகம்
## என்றும் எமக்கு உறுதுணை

பருத்தித்துறையில் கடந்த 28 ஆண்டுகள் ஆத்மீகப் பணியில் ஈடுபட்டுவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம், தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 117-ஆவது பிறந்த நாள் 31-12-1969 அன்று ஒரு சிறிய வீட்டில் ஆரம்பமானது. 1971 ஆம் ஆண்டில் சேவாச்சிரமத்துக்கென சொந்த நிலத்தை வாங்கமுடிந்தது. 1972 ஆம் ஆண்டில் தவத்திரு. சுவாமி விருபாக்ஷானந்தர்மகராஜ் தந்த வரைபடத்தின்படி அத்திவாரம் இடப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பமாகின.

சேவாச்சிரமத்துக்குநன்கொடைகளை அளித்து வந்தவர்கள், அரசியல் கலவரத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், விதவைகள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுத்து உதவுமாறு வேண்டினார்கள். ஆகையால் இன்று வரை தாய், தகப்பனை இழந்த பிள்ளைகளுக்கு, விதவைகளுக்கு, தேசிய சேமிப்புவங்கி மூலம் அறக்கொடைத்திட்டம் வீடுகட்டியும், தையல் இயந்திரம் அன்பளிப்புச் செய்தும் பலதரப்பட்ட நிவாரண உதவிகள் மூலம் சுமார் 40 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டில் மட்டும் ஏழு இலட்சம் ரூபா மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டது.

அன்னை ஸ்ரீ சாரதாதேவிக்கு ஓர் ஆலயம் அமைக்கவேண்டிய விருப்பத்துடன் 1971 ஆம் ஆண்டு தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் உருவச்சிலை வணக்கத்துக்குரிய சுவாமி வீரேஸ்வரானந்தர் மகராஜ் அவர்களுடையஆசியுடன்பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த உருவச் சிலையை உயிர் உள்ள அன்னையாகவே நாம் யாவரும் கருதி வழிபட்டு வருகிறோம். கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த துறவிகள் அவ்வப்போது ஆச்சிரமத்துக்கு வந்து அருளுரை வழங்கியுள்ளார்கள்.


அழகு பொழியும் மூன்று தூபிகளுடன் விசாலமான பிரார்த்தனை மண்டபத்துடன் பலமித இன்னருஞ் சோபிதஙளுடன் கூடிய ஆலய குடமுழுக்கு இன்று நடைபெறுவது தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் திருவருட் கடாட்சமே.

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் குடமுழுக்கு நிச்சயம் செய்யப்பட்டதும் இலண்டனில் உள்ள ஓர் அன்பர் சேவாச்சிரமத்துக்கு அருகில் உள்ள நிலத்தை குறைந்த விலையில் தந்துள்ளார். இந்த பரந்த 7 பரப்பு நிலத்தில் நூல் நிலையம், வாசிகசாலை, விருந்தினர் விடுதி—போன்ற பணிகள் ஆரம்பமாவது நம் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இந்தக் கட்டடத்தின் மதிப்பீடு 6 இலட்சம் ரூபாவாகும். சேவாச்சிரமத்தின் வளர்ச்சிப் பணிகளில் அடுத்து நிறைவேற்ற வேண்டியது நூல்நிலையக் கட்டடமே.

ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் இலங்கை கிளையின் உபதலைவர் தவத்திரு. சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ் பொறுப்பேற்ற காலந்தொட்டு சுவாமிகளின் அருளாசி, ஆதரவு, ஆலோசனைகள் நமக்கு ஒரு பெரிய பேறாகும். சுவாமிகளின் விருப்பப்படி நமது சேவாச்சிரமம் பதினாறாயிரம் ரூபா செலவில் சுவாமி விவேகானந்தரின் அழகிய சிலையை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வந்துள்ளது. இந்த அழகிய கம்பீரமான சிலை யாழ். இந்துக்கல்லூரியில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தவத்திரு. சுவாமி விருபாக்ஷானந்தர் மகராஜ் அவர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப்படும்.

இச்சேவாச்சிரமம் வடமாகாணத்தில் சகல பாகங்களுக்கும் ஆத்மீகப் பணிசெய்து வருவது யாவரும் அறிந்ததே. அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் அருட்பிரவாகம் மேலும் எமது சேவைகளுக்கு உறுதுணையாகவும், தூண்டுதலாகவும் அமையட்டும். நாம் மேலும் தீவிரமாகவும், பக்தி பூர்வமாகவும் செயற்பட தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் திருவடியில் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

▪ சுவாமி சித்ரூபானந்தா



வளர்ச்சிப் பணிகளில் ஒன்றான
நூல் நிலையம் - வாசிகசாலையின் வரைபடம்

**ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்**
**திட்டமிட்டுள்ள எதிர்காலப் பணிகள்**

★ நூல் நிலையமும் வாசகசாலை அமைத்தலும்
★ ஏழைச் சிறார்களுக்கு புதிய திட்டம்
★ ஆன்மீக தானம்
★ முக்தி — சென்னை ஸ்தாபனத்துடன் இணைந்து செயற்கைக் கால் அமைத்தல்.

கொழும்பு விவேகானந்த சபையினரின் சமய பாடப் பரீட்சையை யாழ். மாவட்டத்தில் ஆண்டு தோறும் நடத்துதல்.

## விவேகானந்தர் உருவச்சிலை திறப்பு

சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு விஜயம் செய்து சொற்பெருக்காற்றிய அடையாளமாக, பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் அன்பளிப்புச் செய்த உருவச்சிலை யாழ். இந்துக்கல்லூரி வளாகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (08-09-1998) அன்று ஸ்ரீமத் சுவாமி விருபாக்ஷானந்தா மகராஜ் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.



வணக்கத்துக்குரிய
**சுவாமி வீரேஸ்வரானந்தர் மகராஜ்**
திருவடிகளில் இம்மலரைச்
சமர்ப்பிக்கின்றோம்.

## அன்னை அன்று சொன்னது!

குருதேவர் எண்ணற்ற கருத்துக்களின் இருப்பிடமாக இருந்தார். அவை இந்தமடத்தின் (ராமகிருஷ்ண மிஷனின்) மூலமே உலகெங்கும் பரவப் போகிறது. யுகயுகமாக இது இவ்வாறே நடைபெறப் போகிறது.....

அதற்காகத்தான் (சாதாரண மானவர்களும் ஆன்மீக வாழ்வில் ஈடுபடுவதற்காகத்தான்) என் நரேன் (சுவாமி விவேகானந்தர்) இத்தகைய பணிகளை (நிவாரணப் பணி போன்றவற்றை) அறிமுகப்படுத்தியிருக்கிறான். நமது சங்கம் இந்தப் பாதையில்தான் போகும் ... காலப்போக்கில் அதன் அற்புத விளைவுகளை நீங்கள் காண்பீர்கள். ★

— அன்னை ஸ்ரீ சராதாதேவி

★ ★ ★ ★ ★

## ஆதரவு தந்த அன்னை

சிந்தித்துப் பாருங்கள்!

பத்துப் பன்னிரெண்டு இளைஞர்கள் மக்களுக்குப் பெரிய கருத்துக்களை விளக்கி, அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக உறுதி பூண்டிருப்பதாகக் கூறியபோது அந்த மக்கள் வாய்விட்டுச் சிரித்தனர். கேலி செய்தனர். சிரித்ததுடன் நிற்காமல் எங்களுக்குக் கொடுமைகளையும் செய்தனர்.

அத்துடன் நின்றதா? இல்லை, எங்கள் பெற்றோர்கள் எங்கள் கன்னத்தில் அறையவும் விழைந்தனர். துன்பங்கள் பெருகப் பெருக எங்கள் உறுதி தீவிரமடைந்தது.

எங்கள் குருதேவரின் மனைவியான இந்தப் பெண்மணி மட்டுமே (அன்னை ஸ்ரீ சாரததேவியார்) இளைஞர்களாகிய எங்களுக்கு, எங்கள் கருத்துக்களுக்கு ஆதரவு காட்டியவர்; அனுதாபப்பட்டவர். ஆனால் அவரோ ஆதரவற்றவராக இருந்தார்; எங்களை விட ஏழையாக இருந்தார். அதனால் என்ன? நாங்கள் பணியில் குதித்து விட்டோம்.

இந்த உயரிய கருத்துக்கள் இந்திய நாட்டை விவேகம் பொருந்திய பாதையில் அழைத்துச் செல்லும். எவ்வளவோ நாடுகளுக்கும், இனங்களுக்கும் பொன்னான காலத்தைத் தோற்றுவிக்கும் என்று நான் நிச்சயமாக நம்பினேன். நான் வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக நம்பினேன். ★

-சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் அலுவலகத்தில் சில பணிகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் தேருநர் பதிவேடுகளிலிருந்து பிரித்தெடுப்புகள் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மேற்படி அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் யாழ். செயலகத்திலுள்ள உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலக விளம்பரப்பலகையில் ஒட்டப்பட்டுள்ளது.

தேருநர் பதிவேடுகளிலிருந்து பிரித்தெடுப்புகள் வழங்கப்படுவதற்காக பயன்படுத்தப்படும் படிவங்கள் யாவும் முடிவடைந்துவிட்டன. தலைமை அலுவலகத்திலிருந்து படிவங்கள் கிடைக்கும்வரை பிரித்தெடுப்புகள் வழங்கல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5-6)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை
எல்லைக்குள் காணி கொள்வனவு செய்யும்

## பொது மக்களுக்கான ஆலோசனை

வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் காணி கொள்வனவு செய்வோர்கள் இக் காணியின் வீதி, விஸ்தரிப்பு எல்லையை அவதானிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். ஏனெனில் வீதி, விஸ்தரிப்பு எல்லைக்குள் எவ்விதமான கட்டட அமைப்புக்களும் மேற்கொள்ள முடியாது. ஒவ்வொரு வீதியின் விஸ்தரிப்புத் தூரத்தை வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலக வேலைப்பகுதியில் அறிந்து கொள்ளலாம். வீதி விஸ்தரிப்பு எல்லையைக் கவனித்து காணிகளைக் கொள்வனவு செய்தால், எதிர்காலத்தில் கட்டடங்கள் அமைக்கும் போது இடையூறுகள் ஏற்படாது என்பது மட்டுமன்றி எவ்வளவு காணியை வீதி விஸ்தரிப்புக்காக இழக்க வேண்டியிருக்கும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம் என ஆலோசனை வழங்கப்படுகின்றது.

தலைவர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன் துறை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை
தலைமை அலுவலகம்,
நீதிமன்ற வீதி, மல்லாகம்.
31 - 08 - 1998 (சி-4768)

## விலை குறைப்பு

"EDNA" நிறுவனத்தின்
யாழ். பிரதிநிதிகளாகிய நாங்கள் இன்றிலிருந்து
"பண்டிச் சொக்கோவின்" (Bunty)
விலையை 150 ரூபாவாகவும்
"பண்டி ரொபி" (Bunty)
பக்கட்டின் விலையை 55 ரூபாவாகவும்
குறைத்துள்ளோம என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொளகிறோம்.

குறிஞ்சி மருந்தகம்
558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி. 021. 2210 (சி/4764)

## "ரைட் பிறதேர்ஸ்"

கரவெட்டி

### ஆலோசனைகளும் உதவிகளும் இலவசம்

- ★ கடும் பாதிப்புற்றோர்களுக்கான நிவாரண ஆலோசனைகளும் உதவிகளும்.
- ★ 1983 ஆடி மாதத்திற்குப் பின் இறந்த, காணாமற் போன, வேறு விதமான தாக்கங்களில் உள்ளவர்களுக்கான ஆலோசனைகள் இலவசம். (உதவிகளும்)
- ★ 1983 ஆடி மாதத்திற்குப் பின் பல காரணங்களின் காரணமாக தங்களுடைய பதவிகளை (தொழில்களை) இழந்தவர்களுக்கான ஆலோசனைகளும் உதவிகளும் (இலவசம்).
- ★ மேற் கூறப்பட்டவைக்குள் அடங்காத இவைகளில் சம்பந்தப்பட்ட வேறு விதமான பிரச்சினைகள் (ஐயம், சந்தேகம்) இருப்பின் தொடர்பு கொள்ளவும்.
- ★ எம்முடன் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு (மேலதிக விவரங்களுக்கு) தொடர்பு கொள்ளவும். ஞாயிற்றுக் கிழமைகளில் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். தங்கள் முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறையை அனுப்பும் படி வேண்டப்படுகின்றீர்.

நி. நல்லையா
"ரைட் பிறதேர்ஸ்"
வெல்லிக்கன் தோட்டம்,
பிள்ளையார் கோயில்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி,

(சி-4724)

# யாழ்நகரில்விரைவில் 'ஒசுசல' மருந்து நிலையம்

கொழும்பு, செப். 6

யாழ். மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை வழங்கும் நோக்கில் அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனத்தின் கிளையான "ஒசுசல" அடுத்த ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் என அக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் டாக்டர் கொல்வின் குணவர்த்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் மருந்துப் பொருள்கள் அதிக விலையில் விற்கப்படுவதால் அந்த நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் இந்தக்கிளை திறக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"ஒசுசல" கிளைக்கான கட்டடம் ஒன்றைப் பெறுவது தொடர்பாக யாழ். மாநகர முதல்வருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் சாதகமான பதில் கிடைத்ததும் அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு புதிய கிளையைத் திறப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-10)

## பிரதேச சபை கூட்டம்

வலிகாமம் தெற்கு, செப். 6

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முதலாவது கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை பிரதேசசபை மண்டபத்தில் தலைவர் மா. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

(ஐ-152)

## விளையாட்டுப் போட்டி

சுன்னாகம், செப். 6

சுன்னாகம் தெற்கு காந்திரூன் சனசமூக நிலையத்தின் மாலை நேரப் பாடசாலை மாணவர்களது விளையாட்டுப்போட்டி அண்மையில் நிலையத் தலைவர் செ. தவராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த பீ. தேவராசா, கிராம சேவகர் எஸ். வைத்தியநாதன், வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் ஜீ. தேவச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-27)

## மண்வெட்டி வழங்கல்

வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு 'கெயர்' நிறுவனம் மண்வெட்டிகளை விநியோகிக்கவுள்ளது.

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மேற்படி நிறுவனத்தின் உதவித் திட்டத்தில் பயன்பெற்று வரும் விவசாயிகளுக்கே மண்வெட்டிகள் விநியோகிக்கப்படவுள்ளன. மூளாய், வட்டுக்கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு முதற்கட்டமாக இம் மண்வெட்டிகள் வழகப்படவுள்ளன.

(ஐ-99)

STAR
கல்வி நிலையம்
சுன்னாகம்.
2000, 99 A/L தமிழ்
திரு N. பாலா
2000 செய்யுட் கோவை
சனி ஞாயிறு 11 - 12
99 ஈழத்து இலக்கிய வரலாறு
சனி ஞாயிறு 12 - 1
ஆரம்பம்:- ஞாயிறு
06 - 09 - 98
(58954)

# மோட்டார் சைக்கிளுடன் தப்பியவர்கள் கைதாகித் தடுப்புக்காவலில்

யாழ்ப்பாணம், செப். 6

மோட்டார் சைக்கிள் நம்பிக்கை மோசடி தொடர்பாகக் கைது செய்யப்பட்டு யாழ். நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இருவரை இம் மாதம் 14 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

யாழ். நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் தரகர் ஒருவரின் துணையுடன் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்ய வந்த இளைஞர் மோட்டார் சைக்கிளை ஓட்டிப் பார்த்து எடுப்பதாகக் கூறி வாங்கி அதனை ஓட்டிப்பார்க்கும் சாக்கில் மோட்டார் சைக்கிளுடன் தலைமறைவானார்.

பொலீஸாரின் நடவடிக்கையை அடுத்து மோட்டார் சைக்கிளுடன் தலைமறைவான பாலராசா சசிகரன் (17 வயது, சரசாலை) தரகரான அந்தோனிப்பிள்ளை பூபாலசிங்கம் (யாழ்ப்பாணம்) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

(ஐ-5-15)

## புதுக்கடைத் திறப்புவிழா

ஷெல் லங்கா கம்பனியின் வாயு சிலிண்டர்களை இன்று முதல் யாழ். மாவட்டத்திற்கு விநியோகிக்க உள்ளோம்.

"MACSS"
70, பெரியகடை, யாழ்ப்பாணம்.

மேற்படி திறப்புவிழா வைபவத்தில் பாவனையாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ் வண்ணம்
மெக்ஸ் நிறுவனத்தினர்
(58957)

பண்டத்தரிப்பு
## பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
### வெற்றுப் பொருள் விற்பனை

கீழ்க் குறிப்பிடப்படும் வெற்றுப் பொருள்கள் எமது சங்கத்தில் விற்பனைக்கிருக்கின்றன.

01) வெற்றுச்சாக்குகள் — 2,103 தனி
02) வெற்றுப் பைகள் — 14,565 தனி

பெற்றுக்கொள்ள விரும்புவோர் மேற்படி பொருள்களை அலுவலக நேரத்தில் பார்வையிட்டு கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கூறுவிலை முடிவு திகதி: 12 - 09 - 1998

- பொது முகாமையாளர்

பண்டத்தரிப்பு
பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.
05 - 09 - 98

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
## மண்எண்ணெய் வண்டில் கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம்

1. சங்கம் மண் எண்ணெய் விநியோகத்திற்காக எண்ணெய் வண்டில் ஒன்று கொள்வனவு செய்யவுள்ளது. வண்டில் வைத்திருப்பவர்கள் அதற்கான விலையைக் குறித்து கீழ்க்குறிப்பிடும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## மண்எண்ணெய் விநியோக சேவைக் கூலி கேள்விப்பத்திரம்

2. மண்எண்ணெய் வண்டில் வைத்திருப்பவர்கள் சங்க எல்லைக்குள் இருக்கும் கிளைகளுக்கு துரிதமாக எண்ணெய்விநியோகத்தை நடத்துவதற்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான சேவைக்கூலி இருபகுதியினராலும் நேரில் தீர்த்துக் கொள்ளப்படும்.

அனுப்பவேண்டிய விலாசம்:
பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப நோ. கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.

விண்ணப்ப முடிவு திகதி:
19 - 09 - 1998 சனிக்கிழமை பிற்பகல் 1-00மணி

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ, கூ. சங்கம்.
பண்டத்தரிப்பு.
05 - 09 - 98 (சி/4772)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## நெருப்புக்குள் தள்ளுவதா?

வன்னிப் பிரதேச மக்களுக்கான நிவாரணம் வழங்கும் விடயத்தை அரசாங்கம் சட்டிக்குள் இருந்து எரியும் அடுப்பிற்குள் தூக்கிப் போட்டிருக்கிறது!

இடம்பெயர்ந்தோருக்கு உரிய நிவாரணத்தைப் பெறும் வடபகுதி மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் முடிவை அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. தமிழ்க் கட்சிகளாலும் தமிழ் மக்களாலும் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பின் விளைவாகக் குடாநாட்டில் நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கும் முடிவை வாபஸ் பெறுவதற்கு அரசு உறுதி அளித்திருக்கிறது.

ஆனால் வன்னியில் நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கும் முடிவை வாபஸ்பெற மறுத்துச் செய்ய அது மறுத்துள்ளது.

இப்போது அதற்கும் மேலாக, வன்னிப் பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்போருக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் என்றும், ஏனையோர் மன்னாரில் உள்ள அகதி முகாமுக்குச் சென்று தங்கினால் மட்டுமே நிவாரணம் வழங்கமுடியும் என்றும் அரசாங்கம் இப்போது அறிவித்திருக்கிறது

இந்த அறிவிப்பு, வன்னிவாழ் மக்களையும், குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றவர்களையும் சோற்றுக்காக அடிமைப்படுத்தும் அரசின் கொடுமையாகும்

வன்னிவாழ் தமிழ்மக்கள் மீது அரசாங்கம் ஏற்கனவே மறைமுகமான பொருளாதாரத் தடையை விதித்திருக்கின்றது. அதனால் போரினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அப்பிரதேச மக்கள் பட்டினிச் சாவு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்று அங்கு சென்றுவரும் சுயேட்சையான தரப்புகள் அடிக்கடி கூறிவந்தன.

அவ்வாறிருக்கவும், அகதி முகாம்களில் இருப்போருக்கு மட்டுமே நிவாரணம்; நிவாரணம் வேண்டுமானால் அகதி முகாம்களுக்கு வாருங்கள் என்று கட்டாயப்படுத்துவது அதர்மமாகும்.

தான் எங்கே தங்கியிருக்க வேண்டும் என்பதனை முடிவு செய்யும் சுதந்திரம் ஒருவனது அடிப்படை மனித உரிமை. நிவாரணத்தைக் காட்டி, தான் விரும்பிய இடத்திலேயே மக்கள் — இடம்பெயர்ந்தோர் — தங்கியிருக்க வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது மக்கள் மீதான அடக்குமுறை.

அகதி முகாம்களில் மக்கள் நெருக்கமாக வாழ்வதால் உண்டாகும் சுகாதாரக் கேடுகள், நோய் ஆபத்துக்கள், மரணங்கள் கடந்த எட்டு வருடத் தொடர் அவலங்கள். இதற்குப் பின்னரும் நிவாரணத்தைக் காட்டி அகதி முகாம்களுக்கு வருமாறு மக்களைக் கட்டாயப்படுத்துவது அவர்களை கொலைக்களத்திற்கு அழைப்பதற்கு ஒப்பாகும் நிவாரண நிறுத்தத்தை எதிர்த்து வன்னி மக்கள் கடந்த பல நாள்களாக நடத்திவரும் சாத்வீகப் போராட்டத்தை முறியடிப்பதற்கான "ஆயுத"மும் ஆகும்.



பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் 132 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி யாழ். பொலிஸ் நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்களுக்கான வீதிப் போக்குவரத்து ஒழுங்குப் பயிற்சி கடந்த வியாழனன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. வீதி ஒழுங்கு விதிகள் பற்றி மாணவர்களுக்கு பொலிஸார் பயிற்சி அளிப்பதை படத்தில் காணலாம்.

யாழ். பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர்கள் கபிலரட்ண, ஞானரட்ண மற்றும் கல்லூரி அதிபர் எஸ். ராஜதுரை மற்றும் ஆசிரியர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். (ஐ-9)

(படம்: சுதா)

## யாழ்ப்பாணத்திலும் பொலிஸ் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், செப். 6

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் 132 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்பட்டது.

யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகளும், பொலிஸாரும் பொலிஸ் நிலையத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

யாழ் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு வீதி ஒழுங்குகள் பற்றிக் கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன், வீதி ஒழுங்கை பேணும் கடமையில் ஈடுபடும் மாணவத் தலைவர்களுக்கு வீதி ஒழுங்குச் சீருடைகளும் வழங்கப்பட்டன.

இந்த வைபவத்துக்கான ஏற்பாடுகளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. மோகன்தாஸ் உதவி பொலிஸ் அதிபர் சரத் பெர்னாண்டோ, இன்ஸ்பெக்டர்களான கபிலரட்ண ஞானரட்ண ஆகியோர் ஒழுங்கு செய்திருந்தார்கள். (இ-9)

## குடாக்கடல் ஊடாக
## 1,275 குடும்பங்கள் கடந்த மாதம் வருகை

யாழ்ப்பாணம், செப். 6

வன்னிப் பகுதிகளில் இருந்து யாழ். குடாக்கடல் ஊடாக கடந்த மாதம் ஆயிரத்து 275 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 474 பேர் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

குருநகர் நலன்புரி முகாம் பதிவேடுகளிலிருந்து இவ்விவரம் திரட்டப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் குடாக்கடல் ஊடாக வன்னியிலிருந்து அகதிகள் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். (ஐ-5)

## நியமனம் கிடைக்காத
## பயிலுநர் ஆசிரியர்கள் போராட்ட முஸ்தீபு!

சுன்னாகம், செப். 6

பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் வதிவிட வேறுபாடு காரணமாகப் புறக்கணிக்கப்பட்டோர் தமக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி சாத்வீக வழியில் எதிர்ப்புத் தெரிவிக்க தீர்மானித்துள்ளனர்.

வதிவிட வேறுபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த சனியன்று ஒன்று கூடி அமைத்த சங்கம் இப்போராட்டத்தினை முன்னெடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த போட்டிப் பரீட்சையில் நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு விதித்த வெட்டுப்புள்ளியிலும் கூடுதலாகப் பெற்றும், தமக்கு ஆசிரிய நியமனம் வழங்குவது வதிவிட வேறுபாட்டைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டுள்ளதாகவும்—

இந்நியமனத்தைப் பெற்றுத் தருவதற்கு கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறும்—

இச்சங்கம் யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளது.

எதிர்வரும் 10 ஆந் திகதிக்கு முன்னர் சரியான பதில் கிடைக்காத பட்சத்தில் தாம் தொடர்ச்சியான சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டு உள்ளதாகவும் இச்சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-27)

### நாளை

ஆவணி - 22

திங்கட்கிழமை

திதி: பிரதமை

பிற்பகல் 03.32 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி

மாலை 05.14 வரை.

சுபநேரம்: 12.04 - 01.34

ராகுகாலம்: 07.34 - 09.04

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

சிக்கனமும், சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.

[illegible]

## ரகசிய ஆவணங்களுடன் திருமலையில் ஐவர் கைது

கொழும்பு, செப். 6

கொழும்பில் தாக்குதல்கள் நடத்தும் திட்டங்கள் தொடர்பான தகவல்களை அனுப்பி வந்ததாகச் சந்தேகித்து ஐந்து பேர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை வடக்கு கடலோரக் கிராமத்தில் தங்கியிருந்து காலத்துக்கு காலம் கொழும்பில் உள்ள தமது உறுப்பினர்களுக்கு தகவல்களை அனுப்பி வந்ததாக இவர்கள் ஒப்புக் கொண்டுள்ளதாகவும்—

கொழும்பில் உள்ள கேந்திர நிலையங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தொடர்பான வீடியோ கசற்றுக்கள், ஆவணங்கள், வரைபடங்கள் என்பன இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-3)

## அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 6

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அத்தியார் இந்துக்கல்லூரியில் கோட்டக்கல்வி அலுவலர் ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிபர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

## இருபாலை கிழக்கு கிராமங்களுக்கு குழாய் நீர் விநியோகிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம் செப். 6

இருபாலை கிழக்குப் பகுதியில் உள்ள மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்காக 2 கோடி (20 மில்லியன்) ரூபா செலவில் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப் பிரதேச மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் சென்று வரவேண்டிய நிலையுள்ளது. எனவே இம்மக்களின் நன்மை கருதியே இத் திட்டம் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். கிளையால் தயாரிக்கப்பட்ட இந்தத்திட்டம் தற்போது அதன் தலைமையகத்தின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின்படி கோப்பாய்ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாகவுள்ள கோப்பாய் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் தண்ணீர் விநியோகத்திற்குரிய கிணறுகளைத் தோண்டி அதிலிருந்து நீர் விநியோகத்தை மேற்கொள்வதற்குத் திட்டமிடப் படுள்ளது.

இத் திட்டத்தின் ஆரம்ப வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-6)

## ஆள்கள் இல்லாத
## வீட்டு வளவுகளில் இருந்து செம்பாட்டு மண் அகழ்வு!

யாழ்ப்பாணம், செப். 6

கோண்டாவில் பகுதியில் ஆள்களில்லாத வீட்டுவளவுகளிலிருந்து செம்பாட்டுமண் களவாக அகழ்ந்து உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக முறைப்பாடு செய்யப்படுகிறது.

இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் வீட்டு வளவுகளைப் பராமரிப்பதாகக் கூறிக்கொண்டு இவ்வளவுகளிலுள்ள செம்பாட்டு மண் மற்றும் பயன்தரு மரங்கள் போன்றவற்றையும் பராமரிப்பவர்கள் விற்பனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு டிரக்டர் செம்பாட்டு மண் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுடன் நல்லுறவு இருப்பின்
# மனித உறவிலும் விரிசல் உண்டாகாது

## அருட்திரு கு. ஐ. குமரேசன்

ஞாயிறு நற்பிரசாதம்

இன்று மனித உறவு சிதைக்கப்படுகின்றது. குடும்பத்தில் கணவன், மனைவியருக்கு இடையேயான உறவு இல்லை. சகோதரர்களுக்குள் உறவு இல்லை, ஒரு குடும்பத்துக்குள் இவ்வகையாக ஏற்படுகின்ற உறவுச் சிதைவு அயற் குடும்பத்திற்குள் பரவி, சமூகத்துக்கே நாளடைவில் தொற்றி விடுகின்றதைக் காண முடிகின்றது.

இவ்விதமான உறவுச் சிதைவுக்குக் காரணம் என்னவென்று நோக்குங்கால், கடவுளுக்கும் எமக்குமுள்ள ஒப்புரவற்ற தன்மையே மனித உறவின் விரிசல் என்று உணர முடியும்.

கடவுளுடன் ஒவ்வொரு தனி மனிதனும் சரியான தொடர்பை வைத்திருப்பானானால் மனித உறவில் விரிசலைக் காணமுடியாது. யாக்கோபு தன் அண்ணனாகிய ஏசாவுக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் தவறிழைத்ததைக் காணலாம். இதற்காக ஆதியாகமம் முப்பத்திரெண்டாம் அதிகாரத்தில் மிகவும் மன வியாகுலப்பட்டு, யாக்கோபு உணர்ந்து கொள்வது என்னவெனில், ''நான் கடவுளுக்கு விரோதமாகவே தவறிழைத்தேன்'' ஆகவே முதலில் கடவுளோடு ஒப்புரவாக வேண்டும் என்பதாகும். அதன் பின்னர் கடவுளோடு போராடி ஜெபிக்கின்றான். இதனால் கடவுளோடு போராடுகின்றவன் என்ற நாமத்தையும் தன்பால் தரித்தவனாய் கடவுளோடு ஒப்புரவாகிய பின் தன் அண்ணனாகிய ஏசாவுடன் ஒப்புரவாகச் செல்கின்றான்.

ஆகவே அன்பு சால் உள்ளங்களே! எமக்கும் எம் அயலவர்களுக்கும் உள்ள உறவு விரிசலின் காரணம், எமக்கும் கடவுளுக்கும் உள்ள ஒப்புரவற்ற தன்மையே. இவ்வுண்மையை உணர்ந்து கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

மனிதன் மனிதனுடைய விருப்பத்தை வெல்வதிலும் பார்க்க கடவுளுடைய விருப்பத்தை எமது ஒப்புரவின் தன்மையால் வெல்லப்பழக வேண்டும். இந்தத் தன்மை எம்பால் வருமேயானால் நாம் வாழும் கிராமம், நாடு இவற்றில் பிணக்குகள் அற்ற ஒரு சூழலில் வாழமுடியும்.

மனிதர்கள் ஒவ்வொருவரும், ஆசை மற்றும் உலக பந்த பாசங்களில் மூழ்கித் தத்தளிக்கின்ற ஒரு நிலைமைக்குள் விரும்பியோ விரும்பாமலோ தள்ளப்படலாம். காற்றுக்கு மரத்திலுள்ள இலைகள் ஆடத்தான் செய்யும். இது இயற்கையின் நியதி, ஆனால் உலகத்தில் வாழ்கின்ற நாங்கள் பாசமெனும் காற்றினால், ஆசை எனும் காற்றினால் பல வேளைகளில் இலைகளைப் போல ஆடவும், அசையவும் முற்படுகின்றோம். இவ்விதமான சந்தர்ப்பங்களில் கடவுளின் விருப்பத்தைப் பெற முயலவேண்டும்.

'தேடாமல் கெட்டது உறவு' என்பார்கள். அவ்வண்ணம் கடவுளையும் நாம் தேடாமல் இருக்கின்ற போதே, எமது உறவில் கசப்பும், விரிசலும் உண்டாகின்றன.

போட்டி மனப்பான்மையும் மனித நேயமற்ற காரியங்களும் எம்மைக் கூறு போடுகின்றதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள உறவு நல்லுறவாக அமையுமானால் உன் சகோதரர், அயலவர்பால் உள்ள உறவும் நல்ல முறையில் அமையும். பிணக்குகள் அற்ற சமூகம் வளரும்.

''உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகின்ற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்திலே இருக்கிற என் பிதாவினால் அது உங்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' —மத்தேயு: 18:19

# வரலாற்றுச் சம்பவத்தை நினைவலையாகத் தரும் நூல்

## நூல் வரிசை

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் என்ற நூல், 1995 ஆம் ஆண்டு ஒக்டோபரிலிருந்து 1996 ஆம் ஆண்டு ஏப்பிரல்வரை யாழ்ப்பாணத்தின் வரலாறுகாணாத இடப்பெயர்வின் நேரடி அனுபவங்களை எடுத்துக்காட்டுகின்றது. ஆசிரியர் படிப்பவர் மனதில் நன்கு பதியத்தக்கதாக எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

வலிகாமத்தில் பல தலைமுறைகளாக வாழ்ந்த மக்கள் கூண்டோடு வெளியேறிய நிகழ்வின் வரலாற்று ஆவணமாகத் திகழும் இந்நூலில், மக்கள் ஓட்டமும் நடையுமாக வெளியேறியபோதிலும் இடம்பெயராது வலிகாமத்திலேயே வாழ்ந்த தனது அனுபவங்களை எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

யாழ்ப்பாணத்திற்கும் அராலிக்குமிடையே நடந்த சம்பவங்கள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. வலிகாமத்தில் இராணுவத்துடன் வாழ்ந்த வாழ்வின் வரலாற்றுக் கருவூலம் இந்நூல். தான் அனுபவித்ததை, கண்டதைக் கேட்டதை எவருக்கும் அஞ்சாது எடுத்துக்கூறியிருக்கும் துணிவை நூலாசிரியரிடம் காணமுடிகிறது.

இந்நூலின் விரிவாக்கத்தை வரலாற்றில் இடப்பெயர்வுகள், ஏன் எழுதினேன், இடம்பெயர்வு, மக்கள் வந்தனர், வீட்டுக்குச் சென்றேன், மீளக் குடியமர்தல் என்ற தலைப்புக்களில் எடுத்தாண்டுள்ளார்.

ஒவ்வொரு வீட்டுச் சொந்தக்காரரும் பட்டபாடு மேற்படி வரிகள் மூலம் தெரிகின்றது.

அராலி வட்டுக்கோட்டைப் பகுதியிலிருந்து ஒன்பது மைல் தூரம் நடந்து கோண்டாவிலுக்குப் போய் நிவாரணம் வாங்கி வந்த பெண்களையும், முதியோரையும் நான் பார்த்திருக்கிறேன். மனிதர்கள் தலைச் சுமையுடன் நீண்டதூரம் நடந்து செல்வது, அந்தக் காலத்தில் சர்வசாதாரணம் என்பது வயதைத் தாண்டியவர்கள் நோயாளிகள் கூட தலைச் சுமையுடன் நடப்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. என்ன செய்வது? உயிர் வாழவேண்டுமே' என்று ஆசிரியர் அன்றைய நிலையை எடுத்துக்காட்டுகின்றார்.

இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் வந்தது பற்றிக் குறிப்பிடும்போது, 'எங்கள் கண்களையே நம்ப முடியவில்லை' எனக் குறிப்பிடுகின்றார்.

''நம்மவர் மத்தியில் வரலாற்றுச் சம்பவங்களைக் கேவைப்படுத்தும் வழக்கம் மிகமிகக் குறைவு. ஆனால் பெரும்பான்மைச் சமூகத்தினர் மத்தியில் இம் மரபு நன்கு வேரூன்றியுள்ளது. இப்பெருங்குறையைச் சம்பவங்களாக நிரைப்படுத்தி நிவர்த்தி செய்வது தான் இந்நூலாகும். இந்நூலாசிரியர் வரலாற்றுக் கடமையை நம்மவர் மத்தியில் நினைவலையாக என்றும் நிற்க உழைத்துள்ளார்'' என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது.

நூல்: யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள்

ஆசிரியர்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

'குடியிருந்த வீட்டை விட்டுப் போக என்னவோ செய்கிறது. தட்டு முட்டுச் சாமான்கள், சமையல் தளபாடங்கள், எல்லாம் அப்படியே இருக்கின்றன''

''ஓ வீடே! நான் திரும்பி வரும் போது நீ உயிருடன் இருப்பாயா?'' இப்படிக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் வீட்டைக்கட்டி வீட்டிலிருந்து வெளியேறும் போது

இந்நூலில் பிற்சேர்க்கையாக அவரது நாடக நூல் விமர்சனத்தையும் சேர்த்துள்ளார். நாடக ஆசிரியராக எல்லாராலும் அறியப்பட்ட ந. சுந்தரம்பிள்ளை இந்நூலை வெளியிட்டதன் மூலம் வரலாற்றைக் கூறும் ஆசிரியராகவும் கண்டு கொள்ள வைக்கின்றார்.

--புத்தொளி

# வெளிநாடுகளில்...

(3 ஆம் பக்கத் தொடர்)

அது காலவரை வடமொழி இலக்கியம் பற்றியே அறிந்திருந்த வெளிநாட்டு அறிஞர்களும் ஆய்வாளர்களும் திராவிட மொழி பற்றியும் திராவிட இலக்கியம் பற்றியும் அறியும் வாய்ப்புப் பெற்றனர். தமிழ் பற்றிய அறிவில்லாத பிறநாட்டவர்களுக்குத் தமிழின் சிறப்பை உணர்த்த அடிகளார் பல நாடுகளுக்குச் சென்றார்.

கணியன் பூங்குன்றனுடைய ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் பாடல் வரிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தாம் செல்லும் நாடுகளிலெல்லாம் விளக்கினர். ''Every country is my country: Every man is my kinsman'' என ஆங்கிலத்திலும் ''Todos los pais son mi pais todoy ton hombers son mis hermans'' என ஸ்பானிய மொழியிலும் அவர் அந்த அடிகளை மொழி பெயர்க்கச் சொல்லும்போது யாவரும் சங்கப்பாடலின் சிறப்பை அறிந்தனர்.

இவ்வாறாக அவர் இந்தியா, ஜப்பான் போன்ற ஐம்பத்திதொரு நாடுகளுக்கு தமிழ் மொழியின் சிறப்பைப் பரப்பும் தமிழ்த் தூதுவராகச் சென்றுள்ளார். அவருடைய விப் புலமையால்தான் உலகமெல்லாம் சென்று தமிழைப் பற்றி எடுத்துரைக்கும் பணியைச் செய்ய முடிந்தது. பிறமொழியாற்றல் அவருடைய கருத்துக்களை அனைவரும் நன்கு செவிமடுக்கச் செய்தது. அடிகளார் இத்தகைய பணிகளைச் செய்வதற்கு இயல்பாகவே தமிழ் மீது அவருக்கிருந்த பற்றுதல் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியத்தை அறிமுகஞ் செய்ய வேண்டுமென்னும் ஆவலை அவருடைய தனித்துவமான தமிழறிவே ஏற்படுத்துகிறது.

### உலக அரங்கில் தமிழ்

அவர் தமது பாடசாலை நாள்களிலே தமிழைக் கற்கும் வாய்ப்பற்றவராக இருந்தார். தூத்துக்குடியில் ஆசிரியராக இருந்த பொழுது தான் தமிழைக் கற்க வேண்டும் என நினைத்தார். தமிழிலக்கியத்தை கற்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தார். சைவரும், வைணவரும், புத்தரும், சமணரும், முகமதியரும், கத்தோலிக்கரும், புரட்டஸ்தாந்தரும் ஒருங்கே இலக்கிய உரிமை பாராட்டக் கூடிய ஒரு மொழி உண்டென்றால் அது தமிழ் மொழியே. அதனால் பெரியபுராணம் கம்பராமாயணம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சீறாப்புராணம், தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் போன்ற காப்பியங்களுக்கு பல்வேறு சமயங்களுக்கும் உரிய நூல்கள் வேறு எந்த மொழியின் இலக்கியத்திற்கும் இல்லை எனத் துணிந்து கூறலாம் என்று தமிழ் இலக்கியங்களை அவர் மதிப்பீடு செய்தார். அவ்வாறு செய்தமைக்கு அவரது தனித்துவமான தமிழறிவே காரணம். சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்கும் தமிழ் ஆற்றலுள்ள மொழியாக இருந்ததையும் எடுத்துக் காட்டுகிறார். அவர் வெளியிட்ட Tamil Cuiture என்னும் ஆங்கில இதழில் தமிழ் மொழியோடு தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு தமிழை உலக அரங்கில் உரிய இடம்பெற வழிவகுத்தார்.

(வளரும்)

# ஆனைக்குட்டி....

(3 ஆம் பக்கத் தொடர்)

காமம், கல்லோடை, ஆற்றங்கரையான், அன்னதானக்கந்தன் எனப்பல பெயர்களால் அடியவர் போற்றுவர். கதிர்காம முருகன்சாதி, சமய வேறுபாடற்ற சந்நிதிப்பெருமையுடையவர் போல, சந்நிதி முருகனும் குலம், கோத்திரம் முதலிய பேதங்களற்று அருள் புரியும் சந்நிதிப் பெருமையுடையவர்.

கதிர்காமக் கொடியேற்ற நாளில் சந்நிதியானை இங்கிருந்து தேங்காய்கள் உடைத்து தீபஅலங்காரங்களுடன் வழியனுப்பி வைப்பார்கள். இதற்காக கோயிலின் முன்னுள்ள பாறி மரத்தைச்சுற்றி முன் தெருவில் சுமார் நூற்றைம்பது யார் தூரம் தீபாலங்காரத்துடன் வழியனுப்பி வைப்பார்கள் வழியனுப்பி வைக்கும்.

இந்த அரியதான காட்சியைக் காணக்கொடுத்து வைக்கும் அன்பர்கள் மெய்சிலிர்த்து நிற்பர். மறுபடி கதிர்காமத் தீர்த்தத்திலன்று இரவு நடுநிசியில் சுவாமி திரும்பி இங்கு வருவதை அடியார்கள் பக்திப் பரவசத்துடன் கண்டு மகிழ்வர். இதற்கு அத்தாட்சியாகக் கதிர்காமத்திலும் தீர்த்தத் திருவிழாவன்று யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கும் புனித நிகழ்ச்சியை நடத்துவர்.

இப்படி நடந்துவரும் காலத்தில் கதிர்காமத்திவிருந்து திரும்பி வந்த செல்வச் சந்நிதியான் பூசகர் கதிர்காமரை எழுப்பி ''அப்பா! நான் பாத யாத்திரையாக வந்துள்ளதால் மிகவும் களைத்து விட்டேன். எனது பசி தாகத்தை அடக்க எனக்கு ஏதாவது தா'' என்று கேட்க கதிர்காமர், ''சுவாமி! இந்த அகால வேளையில் தங்களுக்கு அமுது படைக்க எங்கு போவேன்?'' என்று மனம் நொந்தபோது ''உன்னிடமுள்ள சிறிது பயற்றைத் துவைத்து இளநீரும் தா'' எனக் கூறிக் கேட்டு வாங்கி திருவமுது செய்தார். அன்றிலிருந்து இன்றுவரை சந்நிதியான் திரும்பி வரும் நிகழ்ச்சிக்குப் பயற்றையும், இளநீரையும் நைவேத்தியமாகப் படைத்து அடியவர்க்கு வழங்குவர்.

நல்லூரான் அபிஷேகப் பிரியன். சந்நிதியான் அன்னதானக் கந்தனாக இன்றும் எத்தனையோ ஏழை எளியவர்க்கு அன்னம் பாலிக்கும் கந்தனாக விளங்குகிறான். சந்நிதியான் பிரசாதம்தீராத வினையெல்லாம் தீர்க்க வல்லது என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை.

செல்வச் சந்நிதி முருகனுடைய வருடாந்த மஹோற்சவம் இன்று தீர்த்தத் திருவிழாவுடன் பூர்த்தியாகிறது. அவனது திருக்கோயிலுக்குச் சென்று தரிசித்துப் பேறு பெறுவோம்.

★

# மக்கள் முகம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவலிங்கம் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன உள்ளகக் கணக்காய்வாளரும் ஆவார்.

இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்விகற்ற



காலத்தில் உதைபந்தாட்ட அணி, கிரிக்கெட் அணி, கரப்பந்தாட்ட அணி ஆகியவற்றின் தலைவராக இருந்ததுடன் மாணவ தலைவராகவும் இருந்துள்ளார்.

இலங்கை சிமெந்துத் தொழிற்சாலை உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும், பொழுதுபோக்குக் கழக செயலாளராகவும் இவர் கடமை புரிந்துள்ளார். சிறந்த சமூக சேவையாளராகிய இவர் ஏழாலை மேற்கு சிவபூதவராயர் ஆலய தர்மகர்த்தா சபை உதய சூரியன் அறிவகம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவரும், கிராம அபிவிருத்திச் சங்க விவசாயக் குழுவின் பொருளாளரும், கிரிக்கெட் மத்தியஸ்தர் குழுவின் முன்னாள் உறுப்பினருமாவார்.

★ ★ ★

பண்ணாகத்தைச் சேர்ந்த உப அஞ்சல் அதிபர் மா. பாக்கியநாதன் யாழ். மாவட்டச் சமாதான நீதிவானாக பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் தற்போது பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபை, பண்ணாகம் ஐக்கிய நாணய சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுச்சபை உறுப்பினராகவும் இருந்து சேவை ஆற்றுகிறார்.

இவர் சமய சமூக சேவைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர் ஆவார்.

★ ★ ★

நாவாந்துறை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் நாவாந்துறை சென். நீக்கலஸ் சனசமூக நிலையத் தலைவருமான மைக்கல் யேசுதாசன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சமய, சமூகப் பணிகளில் முன்னின்று உழைக்கும் இவர் இப்பகுதி மக்களின் அபிமானத்தைப் பெற்றவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தவைத்தியம் மூலம் எயிட்ஸுக்கு மருந்து

## தமிழ்நாடு பேராசிரியர் தெரிவிப்பு

சென்னை, செப். 6

சித்த வைத்தியத்தையும், அலோபதி வைத்தியத்தையும் இணைத்து எயிட்ஸ் நோய்க்கு மருந்து கண்டு பிடிக்க முடியும் என்று தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் சி. என். தேவநாயகம் தெரிவித்துள்ளார்.

உலகில் இதுவரை எயிட்ஸ் நோய்க்கு எந்த மருந்தும் கண்டு பிடிக்கப்படாத நிலையில் சித்த வைத்தியத்தையும், அலோபதி வைத்தியத்தையும் இணைத்து புதிய மருந்து ஒன்றைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் தாம் முன்னேற்றம் அடைந்துள்ளதாக அவர் கூறினார்.

1992 ஆம் ஆண்டு முதல் எச். ஐ. வி. மற்றும் எயிட்ஸ் நோய் தாக்கத்துக்குள்ளான சுமார் 4 ஆயிரத்து 500 பேர் தம்மால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட நான்கு பேருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தம்மால் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் உடலில் எயிட்ஸ் நோய்க் கிருமிகள் பெருமளவு குறைந்து வருவதை அவதானிக்க முடிந்ததாகவும் அவர் கூறினார்.

# சிறப்பாக நடைபெற்ற சந்நிதி ரதோற்சவம்

## இன்று தீர்த்தம்

வடமராட்சி, செப். 6

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய ரதோற்சவம் நேற்று சிறப்பான முறையில் நடைபெற்றது.

யாழ். குடாவின் பல பகுதிகளிலுமிருந்து பெருந்திரளான பக்தர்கள் இந்த உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

ஆலயத்திற்கு சென்ற பக்தர்கள் ஆலய நுழை வாசலில் வைத்து சோதனை செய்யப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வடமராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து வல்லை ஊடாக வந்த பக்தர்களுக்கு விசேட பாஸ் வழங்கப்பட்டது.

இவர்களுக்கான விசேட கரும பீடங்கள் அமைக்கப்பட்டு படையினரால் பாஸ்கள் வழங்கப்பட்டன.

இதற்காக மேலதிக படையினரும், பொலிஸாரும் தொண்டமானாறு பகுதியில் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

இரதோற்சவத்தையொட்டி குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் விசேட போக்குவரத்துச் சேவைகள் இடம் பெற்றன.

இன்று காலை 10 மணிக்கு சந்நிதி முருகன் ஆலய தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (இ-139-15-5-173)

# 19 வயது இளைஞரை 60வயது பெண் திருமணம்

## ஈரானில் சம்பவம்

சென்னை, செப். 9

ஈரானின் வட கிழக்குப் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் விசித்திரமான திருமணம் ஒன்று நடைபெற்றுள்ளது.

60 வயதான பெண் ஒருவரை 19 வயது இளைஞர் ஒருவர் திருமணம் செய்துள்ளார்.

ஏற்கனவே பல தடவைகள் திருமணம் செய்திருந்த அந்தப் பெண்ணின் கணவர்கள் அனைவரும் மரணமடைந்துவிட்டனர்.

தனித்துச் சில காலம் வாழ்ந்து வந்த அந்தப் பெண்ணுக்கும் இளைஞருக்கும் இடையில் ஏற்பட்ட நட்பு காதலாக மலர்ந்ததை அடுத்து அவர்கள் இருவரும் திருமணம் செய்துள்ளனர்.

80 வயதில் திருமணம் செய்து கொண்டு மண்டேலா மகிழ்வாக வாழும் போது எம்மால் மட்டும் ஏன் மகிழ்வாக வாழ முடியாமல் போகும் என்று அந்தப் பெண் கேட்டுள்ளார்.

20 ஆயிரம் றியால்களை அந்த இளைஞன் அப்பெண்ணுக்கு பணக்கொடையாக வழங்கியுள்ளா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-9)

# 111 ஆண்டுகள் சிறை!

சென்னை, செப். 6

பெண்களின் தாலிக்கொடிகளைக் கொள்ளையடித்து வந்த இளைஞர் ஒருவருக்கு மும்பாய் உயர் நீதிமன்றம் 111 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 37 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

கடந்த ஒரு வருட காலமாக 37 பெண்களிடம் தாலிக்கொடிகளை மும்பாயின் பல பகுதிகளிலும் கொள்ளையடித்து வந்த அந்த இளைஞரை அண்மையில் மும்பாய்ப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அந்த இளைஞர் உயர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து ஒவ்வொரு தாலிக்கொடிக் கொள்ளைக்கும் மூன்று ஆண்டுகள் என்ற ரீதியில் நீதிபதி அந்த இளைஞருக்கு 111 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 37 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். (இ-9)

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி இறுதி ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப். 6

டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும்.

லாவண்யா மூக்குக் கண்ணாடியகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள இன்றைய ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணி மோதவுள்ளது.

இன்றைய கிரிக்கெட் ஆட்டத்துக்கு பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் சி. ராஜதுரையும் கௌரவ விருந்தினராக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் தலைவர் ஆர். ரவீந்திரநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-51-9)

# பொலிஸார் சகலருக்கும் ஜனவரியில் சம்பள உயர்வு

கொழும்பு, செப். 6

பொலிஸாருக்கு அடுத்த வருடம் ஜனவரி முதல் சம்பளம் அதிகரிக்கப்படும் என புதிய பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸ் நலன்புரி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற வரவேற்பு விழா ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டிற்கு அரும்பணியாற்றிவரும் பொலிஸார் தற்போது பெறும் சம்பளம் போதுமானதல்ல எனவும்—

பொலிஸாருக்குச் சம்பளத்தை அதிகரித்துக்கொடுப்பதன் மூலம் அவர்களின் சேவையைப் பூரணமாகப் பெறலாம் எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திறப்பு விழாவும் ஆய்வரங்கும்

இலங்கை தமிழ் சோதிட ஆய்வு ஒன்றியத்தின் புதிய அலுவலகத் திறப்புவிழாவும், வாராந்த ஆய்வரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கே. கே. எஸ். வீதியில் உள்ள 308/3 இலக்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

"அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் ஆயுள் நிலைக்குமா?" என்ற தலைப்பிலான ஆய்வரங்கும் 'ஐந்து கிரகச் சேர்க்கை நாட்டுக்கு பாதகமா? என்ற தலைப்பிலான ஆய்வரங்கும் இன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறும். (இ-5-7)

# தட்டெழுத்தாளர் நேர்முகப் பரீட்சை

யாழ். போதனா வைத்திய சாலையில் தட்டெழுத்தாளருக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். செயலக வேலை வங்கிக்கு விண்ணப்பித்தவர்களிலிருந்து இந்த நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை தொடர்பாக தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5-15)


## திருநெல்வேலி கலாமன்றத்தில் நல்லூர் லயன்ஸின்

## இலவச கண், மருத்துவ பரிசோதனை

இன்று ஞாயிற்றுக்கிழமை (06-09-98) காலை 9.00 மணிக்கு நல்லூர் லயன்ஸ் கழகம் தனது செப்டெம்பர் மாதச் செயற்பாடான இலவச நீரிழிவுப் பரிசோதனை, கண்பரிசோதனை, மருத்துவ பரிசோதனை முகாமை திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் நடத்தவுள்ளது.

வைத்தியர்கள், மருத்துவபீட மாணவர்கள் உதவியுடன் நடைபெறவுள்ள கண்பரிசோதனை எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இம் மருத்துவ முகாமை முழுமையாகப் பயன்படுத்திப் பயன்பெற வேண்டுகிறோம்.

லயன் பா. தவபாலன்
தலைவர்
நல்லூர் லயன்ஸ் கழகம்.

(C/4779)

## SPOKEN ENGLISH With GRAMMAR

புதிய பிரிவு ஆரம்பம்:
07 - 09 - 98
திங்கள் 11-00 மணி.
வடமராட்சியின் பிரபல ஆசிரியர்
by: Mr. JOTHY
B. Com. (Hons)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
(58990)

## தேவை

அனுபவமுள்ள சுவீற் மேக்கர் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:
லிங்கன் கிறீம ஹவுஸ்
119, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
(58984)

## மானிப்பாய் கட்டுடையில்

## வீடு, காணி விற்பனைக்கு

சகல வசதி மற்றும் பிரயோசனங்களுடன் மானிப்பாய் கட்டுடை தபாற் கந்தோர் அருகில் புதிய கல் வீட்டுடன் கூடிய 7½ பரப்புக் காணி மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
பா. தவபாலன்
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தரிசும்
82/5, நல்லூர் குறுக்கு வீதி.
நல்லூர்.
(சி/4780)

## C. C. A.

யாழ்ப்பாணம்.
நாடகமும் அரங்கியலும்
திரு. க. ஸ்ரீகந்தவேள்
A/L 99
11-00 — 12-00
A/L 2000
12-00 1-00
ஆரம்பம் :
06 - 09 - 98
A/L 99
கலை, வர்த்தகப் பிரிவு
DAY CLASSES
ஆரம்பம்:
(58978)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் புஸ்பராசா

திருநெல்வேலி முடமாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் புஸ்பராசா 5-09-1998 சனிக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், புஸ்பராகவன் (கனடா), புஸ்பசீலன் (லண்டன்), புஸ்பலீலா (இந்தியா), ரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானச்செல்வம் (இந்தியா), சுகந்தி (கனடா), வாசுகி (இந்தியா), கருணாகரன் (ரஜனி மோட்டோர்ஸ்) ஆகியோரின் மாமனாரும், நடராசா, இராசையா, சுந்தரம், குணசேகரியம்மா, பரம்சோதி, வல்லிபுரம் ஆகியோரின் சகோதரரும், டிக்ஷன், சுருதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-9-1998) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. கருணாகரன்
(ரஜனி மோட்டோர்ஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

445, இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி.
(58991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியஸ்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

லங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளும் விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர் எனவும்—

அதன் பயனாகவே தென்னாபிரிக்க அரசு இவ்விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசின் கவனத்தை ஈர்த்தது எனவும் —

இது தொடர்பாக தென்னாபிரிக்கா அரசு பலகடிதத் தொடர்புகளை ஸ்ரீலங்கா அரசுடன் மேற்கொண்டது எனவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை இடம்பெறின் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கட்டாயமாக அதில் கலந்து கொள்ள வேண்டுமென ஸ்ரீலங்கா அரசு வற்புறுத்தி உள்ளதாகவும் கூறப்படுகிறது

ஆனால் பிரபாகரன் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அதிக ஆர்வம்காட்டவில்லை என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற சமாதானப்பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்று கோரி இருப்பதும்—

தற்போது இந்திய விஜயத்தை மேற்கொண்டுள்ள நீதி, அரசமைப்பு இன விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த அரசு தயாராக இருப்பதாக இந்தியாவில் தெரிவித்திருப்பதும் —குறிப்பிடத்தக்கது.

(இ-10-7)

## இராமகிருஷ்ண...

(முதலாம் பக்கத் தொடர்)

வடபகுதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவும் அவர்களை அங்கு சந்தித்து உரையாடினார்.

பின்னர் அவர்கள் பருத்தித்துறை — புலோலி பசுபதீஷ்வரர் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மங்கள வாத்தியங்களுடன் சமயப் பெரியார்கள், மற்றும் அந்தணப் பெரியார்கள் சகிதம் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு புதிய நூல் நிலையத்துக்கும், வாசிகசாலைக்குமான அத்திவாரக்கல் சுவாமி விருபாக்ஷானந்திஜி மற்றும் சுவாமி ஆத்மகணானந்தர். சுவாமி அஜராத் மானந்திஜி ஆகியோரால் நடப்பட்டது.

பின்னர் சுவாமிகள் மூவரும் அருளுரை நிகழ்த்தினர். மேற்படி வைபவங்களில் பருத்தித்துறையைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இன்று காலை பருத்தித்துறை சேவாச் சிரமத்தில் அமைக்கப்பட்ட தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி திருக்கோயில் கும்பாபிஷேகத்தில் இவர்கள் கலந்து கொள்வர்.

நாளை திருநெல்வேலி ஸ்ரீ ராமகிருஷ்ணாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுவாமி விவேகானந்தரின் சிலைத் திறப்பு விழாவில் சுவாமிகள் குழுவினர் கலந்து கொள்வர்.

(இ-7-173)

## புலிகள்...

(முதலாம் பக்கத்தொடர்)

முதலிய இடங்களில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள். இது சர்வதேச ரீதியிலான பிரச்சினை என்பதைப் புலப்படுத்தியுள்ளன.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-7)

# பாவனைக்கு உதவாத

# சொக்கொலேட், மருந்து

## யாழ். நகரில் பெருமளவு பறிமுதல்

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். நகரிலுள்ள மருந்து விற்பனை நிலையங்களில் காலாவதியான மருந்து வகைகள், சொக்கொலேட் வகைகள். சுகாதாரத் திணைக்கள உணவு மருந்து பரிசோதனைக் குழுவிரானல் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் யாழ். நகரப்பகுதியிலுள்ள மருந்து விற்பனை நிலையங்களை திடீரென முற்றுகையிட்ட இக்குழுவினர் நடத்திய பரிசோதனையின்போது காலாவதியான மருந்து மற்றும் சொக்கொலேட் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சுகாதாரத் திணைக்கள உணவு மருந்து பரிசோதகர் து. மகாதேவன் தலைமையில் இடம்பெற்ற இப் பரிசோதனையின் போது பறிமுதல் செய்யப்பட்ட காலாவதியான மருந்து வகைகளில் யாழ்ப்பாணத்தில் தடை செய்யப்பட்ட கருத்தடை மருந்தான 'கியூ மறிற் ஒரல்' என்ற மருந்தும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

புழுக்கள் பிடிக்கப்பட்டிருந்த சொக்கொலேட் வகைகளும் இப்பரிசேனையின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் நகரக்கடைகளில் சொக்கொலேட் வாங்குவோர் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## தொண்டர் விவரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், செப். 6

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவத்தின் போது கடமையாற்றிய தொண்டர்களின் பெயர் விவரப்பட்டியல்களை நாளை திங்கள் காலை 10 மணிக்கு முன்னதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைக்குமாறு தொண்டர் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள இராமகிருஷ்ண மிசனின் சுவாமிகளுக்கு எதிர் வரும் 10 ஆம் திகதி மாநகர இந்து விடுதியில் இடம்பெறும் வரவேற்பு விழாவில் தொண்டர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் —

எனவே சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவனங்கள் நல்லூர் உற்சவ காலத்தில் கடமையாற்றியவர்களின் பெயர் விவரங்களை தமது அலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறும்—மாநகர சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் கேட்டுள்ளார். (இ-7)

## இன்று

யாழ். திறந்த பல்கலைக் கழக பட்ட மேற் கல்வி டிப்புளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பதிவுப் புத்தகமும், பாடப்புத்தகங்களும் இன்று ஞாயிறு காலை10.30மணிக்கு வழங்கப்படவுள்ளன.

## கூட்டம்

பருத்தித்துறை பிரதேச சபையின் முதலாவது கூட்டம் இம்மாதம் 11 ஆம் திகதி தலைவர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. (இ-5-173)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்)

பாக விளக்குவதற்கு முதலமைச்சர் நிமால் பண்டார நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டதுடன் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் கூட்டினார்.

வடமேல் மாகாண சபையில் தற்போது ஒரு கோடி ரூபா மட்டுமே உள்ளதாகவும்—

அரசாங்கம் இன்னமும் 18 கோடி ரூபாவை தரவேண்டியுள்ளதாகவும்— அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(இ-7)

## முல்லையில்...

முதலாம் பக்கத் தொடர்)

(கடந்த ஒரு மாதகாலமாக வன்னியில் உள்ள சகல அரச செயலகங்கள் முன்பாகவும் இடம்பெயர்ந்த மக்கள் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மண்ணெண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்)

பகுதிகளுக்குச் செல்லும் ஒவ்வொருவரும் 10 லீற்றர் வரையில் மண்ணெண்ணெயை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் தற்போது வந்துள்ள புதிய கட்டுப்பாடினால் மண்ணெண்ணெய் எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ-9-165)

## மன்னிப்புச்சபை..-

(முதலாம் பக்கத் தொடர்)

நாம் ஆயுதம் ஏந்தி நிற்கிறோம். அது தவிர இராணுவ நடவடிக்கைகள் எவற்றிலும் ஈடுபடுவதில்லை. யாழ்ப்பாணத்தில் நாம் ஒரு ஆயுதமும் இல்லாமலே செயற்பட்டு வருகின்றோம்.

அரசின் தீர்வுத்திட்டத்தை முற்று முழுதாகவும் திட்டவட்டமாகவும் நிராகரித்து செயற்படும் ரெலோ மீது சேறு பூசுவதற்காகவே இக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

எமக்கு எந்த வதை முகாமும் இல்லை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைக் கூறுவது சர்வசே மன்னிப்புச் சபையின் பொறுப்பற்ற தன்மையையே காட்டுகின்றது.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9(

## காலநிலை சீர்கேடு..

(முதலாம் பக்கத் தொடர்)

மாக கொழும்பு செல்ல வேண்டி இருப்பவர்களும் இன்று காலை 8. 30 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயப் பகுதிக்கு பயண ஏற்பாட்டுடன் வருமாறும் — மொனறா விமான சேவை அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-9)


# தேவை

கொழும்பிலுள்ள ஒரு பங்களாவில் வேலை செய்வதற்கு உதவியாளர் தேவை.

★ தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

★ சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

★ இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பரதாரர்:
இல. 781,
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பணம்.

(58946)



யாழ்ப்பாண மருத்துவ சங்க
ஆதரவில்
யாழ்ப்பாண மருத்துவ சங்க
**நூலக நிதிக்காக**
யாழ். மருத்துவ பீட மாணவர்கள்
அளிக்கும்
முற்றிலும் புதிய பாணியிலான

# "இன்னிசை அருவி"

காலம்: [ 06-09-98 ] மாலை 2.00 — 5.00 மணி (புதிய நேரம்)

இடம்: கைலாசபதி கலையரங்கு (யாழ். பல்கலைக்கழகம்)

முக்கிய குறிப்பு:

★ ஒரு நுழைவுச்சீட்டுக்கு ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்.

★ இசை அரங்கின் நுழைவாயில்கள் 1.55 மணிக்கு (புதிய நேரம்) மூடப்படும்.

★ ரிக்கற்றுகளில் உள்ள திகதிகளின் படியே அனுமதிக்கப்படுவர்.

காலம் 06-09-98 : 6ஆம் திகதி ரிக்கற் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

(58906)



உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (06-09-98) முற்பகல் 9-00 மணி தொடக்கம் 10-45 மணி(பழைய நேரம்) வரையுள்ள சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**சிறிதரன்**
(சிறி அமலா நகைமாடம்)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**மைதிலி**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து திருமணவிழாவில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்து, விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- மணமகன் இல்லத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் வரவேற்பு உபசாரம் இடம்பெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செ. வீரசிங்கம்,
198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி நா. ஸ்ரீரங்கநாதன்,
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

♣ இரு வீட்டார் அழைப்பு ♣

(சி/4784)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] மனையில் 06-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org